விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 310 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 08 புதன்கிழமை (25.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அமைச்சரவை மாற்றத்தை விமர்சிக்க பெரமுனவுக்கு எந்த உரிமையும் இல்லை

### ஜனாதிபதியை கேள்விக்குட்படுத்த முடியாது அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



(கொழும்பு)
அமைச்சரவை மாற்றத்தை விமர்சிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எந்த உரிமையும் கிடையாது என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அமைச்சரவைமாற்றத்தை அரசின் பிரதான பங்காளிக் 02

## ஆட்சியை கவிழ்க்க எம்மால் முடியும்

### எஸ்.பி.திஸாநாயக்க



(கொழும்பு)
ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு எதிராகச் செயற்பட்டால் அரசாங்கத்தைக் கவிழ்க்க எம்மால் முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பான நிகழ்ச்சியில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 02

## சினோபெக் ஒயில் யாழில் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் சினோபெக் நிறுவனம் பெற்றோல் விநியோகத்தை ஆரம்பித்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மானிப்பாய் மெமோறியல் வீதியில் சினோபெக் ஒயில் வகைகளை அறிமுகம் செய்து விநியோக முகவரை அறிமுகப்படுத்தியுள்ளது.

சினோபெக் ஒயில் நிறுவனத்தின் இலங்கையின் ஏக விநியோகஸ்தரான இன்டர்நஷனல் லுப்ரிக்கட் பிறைவட் லிமிட்டட் நிறுவனமானது யாழ்ப்பாணத்திற்கான தனது விநியோகஸ்தராக 15

முட்டை, கோழியிறைச்சி

## அடுத்த வருடம் ஏற்றுமதி

(கொழும்பு)
முட்டை மற்றும் கோழி இறைச்சி நாட்டில் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதமளவில் மிகுதியாக இருக்குமெனவும் அப்போது இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு முட்டைகளை ஏற்றுமதி செய்யக் கூடிய சாத்தியம் உள்ளதாகவும் விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் டிசம்பர் மாதம் வரையிலேயே இந்நாட்டிற்கு முட்டை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இருக்குமென ஊடகங் 15

## அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படும்

### கல்வி இராஜாங்க அமைச்சர் மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)
இந்த முறை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என நம்புவதாக, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் மீண்டும் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள் 15

## முல்லையில் இளம் குடும்பப் பெண் படுகொலை செய்யப்பட்டு புதைப்பு

### குடும்பத் தலைவர் கைது



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவில் இளம் குடும்பப் பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளார்.

பெண்ணை கொலை செய்த சந்தேகத்தில் குறித்த பெண்ணின் கணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர் 15

## நீர்வேலியில் டிப்பர் மோதி பெண்ணொருவர் உயிரிழப்பு

### ஆலயத்தில் பொங்கலில் ஈடுபட்டவேளை விபரீதம்



(யாழ்ப்பாணம்)
ஆலயம் ஒன்றில் பொங்கல் நிகழ்வில் ஈடுபட்டிருந்த பெண்ணொருவர் மீது டிப்பர் மோதியதில் குறித்த 15

## பயங்கரவாத தடைப்பட்டியல் இருவர் பெயர் நீக்கம்

(கொழும்பு)
பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவியதற்காக கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட இருவரை அதிலிருந்து நீக்கி பாதுகாப்பு அமைச்சு வர்த்தமானி அறிவிப்பை வெளியிட் 15

## முறிகண்டி பிள்ளையார் ஆலய வழக்கு தள்ளுபடி


### துரித அபிவிருத்திக்கு நடவடிக்கை

(கிளிநொச்சி)
12 வருடமாக இடம்பெற்ற திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலய உரிமை தொடர்பான வழக்கு நேற்று செவ்வாய்க் கிழமை உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதும் பராமரிப்புக்காக இந்து சமய கலாசார அலுவல் 15


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 01 . 1944

இறப்பு 21 . 10 . 2023

## திரு.இராமலிங்கம் பஞ்சராசா

நெல்லியடி கரணவாய் கிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி கிழக்குதெடுத்தனையை புகுந்த இடமாகவும் தற்பொழுது சுவிஸ் லாந்து(DAVOS மற்றும் THUSIS) வசிப்பிடமாகவும் கொண்ட திரு.இராமலிங்கம் பஞ்சராசா அவர்கள் 21.10.2023 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வல்லிபுரம் - பத்தினி தம்பதியினரின் அன்பு மருமகனும் வள்ளிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும் பாஸ்கரலிங்கம் (நெதர்லாந்து), கவிதா(சுவீடன்), பிரதீபன்(லண்டன்), கார்த்திகா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்தினிப்பிள்ளை, இராசையா, அமரர் செல்வரத்தினம், வசந்தாதேவி, வசந்தமலர், அமரர் செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் கலைவாணன்(சுவீடன்), அனுசா(நெதர்லாந்து), முரளி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சானா(சுவீடன்), அகில் (நெதர்லாந்து), அபிசன்(நெதர்லாந்து), கேசன்(லண்டன்), மேகா(லண்டன்), நிதுஷா(சுவீடன்) ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர் கனகசபை, அமரர் கணபதிபிள்ளை, அமரர் கிருஷ்ணபிள்ளை, அமரர் நடராசா, தங்கவேல், ஜீவரத்தினம், சிவசுப்பிரமணியம், அமரர் லோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.10.2023 செவ்வாய்க்கிழமை சுவிஸ்நாட்டில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(C-7485)

தொடர்புகளுக்கு:
பாஸ்கரலிங்கம்(மகன்) - 0031 642695924
கவிதா (மகன்) - 0046737015404
பிரதீபன் (மகன்) - 00447377992059
கார்த்திகா(மகள்) - 00447539682435

தகவல்:
குடும்பத்தினர்
021 226 4400
இராசையா
(சகோதரர்)

புதுறோட்
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




சர்வதேச ஐக்கிய கலாம் நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் நிகழ்வு இந்தியாவில் ஜே.பி.ஹோட்டல், கோயம்பேடு, சென்னையில் 15.10.2023 அன்று நிகழ்ந்த வேளை யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

## கலாநிதி இராசையா குவேந்திரநாதன்

அவர்களின் சமூக சேவையினைப் பாராட்டி மகாத்மா காந்தி சமாதான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையை நாமும் பாராட்டுவதோடு அவரது சமூக சேவை மென்மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: உரிமையாளரும், ஊழியர்களும்
ஐங்கரன் களஞ்சியம்
109, பலாலி வீதி, திருநெல்வேலி. (17567)

## அமைச்சரவை...

கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் தவறான முடிவை எடுத் துள்ளார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்திருந்தார்.

சுகாதார அமைச்சர் பதவியிலிருந்து கெஹலிய ரம்புக்வெலவை மாற்றியது முற்றிலும் தவறான விடயம் என்றும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

இது தொடர்பில் அரசின் பங்காளிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் அமைச்சருமான மனுஷ நாணயக்கார கருத்துத் தெரிவிக்கையில், அமைச்சரவையின் தலைவர் ஜனாதிபதியே. எனவே, அமைச்சர்களை நீக்குவதற்கும், அமைச்சர்களை மாற்றுவதற்கும், புதியவர்களை நியமிப்பதற்கும் ஜனாதிபதிக்கு முழு அதிகாரம் உண்டு. அதற்கமைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் சிறிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்.

அவசியம் கருதி இந்த மாற்றத்தை அவர் செய்துள்ளார். இதனை விமர்சிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எந்த உரிமையும் கிடையாது.

மொட்டுக் கட்சி மாத்திரம் இந்த அரசின் பங்காளிக் கட்சி அல்ல. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எனப் பல கட்சிகள் இந்த அரசின் பங்காளிக் கட்சிகளாக உள்ளன. இந்த அரசின் தலைவரும் அமைச்சரவையின் தலைவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. ஜனாதிபதியின் அதிகாரத்தை எவரும் கேள்விக்குட்படுத்த முடியாது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளருக்கு இதை விட வேறு விளக்கத்தை என்னால் வழங்க முடியாது என்றார்.(ம-7)

## ஆட்சியை...

பொதுஜன பெரமுனவின் அனைத்து அமைச்சர்களும் நீக்கப்பட்டாலும் நீங்கள் காத்திருப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது என்று தொகுப்பாளர் கேட்டதற்கு - இல்லை, இல்லை எம்மால் ஆட்சியைக் கவிழ்க்க முடியும். எம்மால் செய்யக்கூடிய பல விடயங்கள் உள்ளன. வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதுடன் பல விடயங்களைச் செய்ய முடியும் என்று அவர் தெரிவித்தார். (ம-7)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அன்புடையீர்!
கடந்த 26.09.2023 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் செல்வரட்ணம் கமலேஸ்வரி (மலர்)

(ஓய்வுநிலை குடும்ப நல உத்தியோகத்தர்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (26.10.2023) வியாழக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் பகல் 12.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (17571)

மணற்பாதி,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
தொடர்புகளுக்கு : 077 959 6562

இங்ஙனம் : குடும்பத்தினர்
சோ.செல்வரட்ணம்
(ஓய்வுநிலை பொறுப்பு தாதிய உத்தியோகத்தர்)
தெரிவிக்கின்றோம்

NEWS 91

NEWS PRESENTER FEMALE
(ENGLISH PART TIME)
News 91 You Tube is seeking highly motivated part time English News Presenter

JOB DESCRIPTIONS
- Interest in media happenings, news updates and curious about general knowledge topics
- Excellent command of English is tech savvy, and driven to learn and adapt. Excellent coordination and PR skills are required. A grasp of the sinhala is definitely an advantage.
- Clear voice with a pleasing personality
- Candidates residing in Northern province are given preference.
- Salary and other perks are negotiable
- If you are the one we are looking for then send us your CV to newsenglish1991@gmail.com

(C-2139)

Channel Head :
Mobile 077 756 1066

அமெரிக்காவில் குடியேற இலவசமாக லொட்ரி விசா எம்மூடாக விண்ணப்பிக்கலாம்

NOV 07 2023 க்கு முன்னர்
Apply Now

SB TRAVELS & TOURS (PVT) LTD
ஊடாக விண்ணப்பிக்கலாம்
Jaffna No.198 : 075 559 9708, 075 559 9709
Colombo No. 13 : 076 691 1089
Colombo No. 15 : 077 108 3482, 077 108 3483
(C-7489)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக விவகாரங்களில் தலையிடுவதை அமெரிக்கத் தூதுவர் நிறுத்த வேண்டும்

## சரத்வீரசேகர கண்டனம்



(கொழும்பு)

**அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இலங்கையின் உள்ளக விவகாரங்கள் குறித்து கருத்து தெரிவிப்பதை தவிர்க்க வேண்டும் என தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வை குழு பரிந்துரைத்துள்ளது.**



2022 மே 9 ஆம் திகதிக்கு பின்னர் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் தூதுவர் கருத்து தெரிவித்திருந்த நிலையிலேயே பாராளுமன்ற குழு இந்தப் பரிந்துரையை முன்வைத்துள்ளது.

இரண்டு வாரங்களிற்கு முன்னர் தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வை குழுவின் கூட்டம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில் குழுவின் தலைவர், உறுப்பினர்கள், முப்படை தலைவர்கள், பாதுகாப்பு செயலாளர் உட்பட்டவர்கள் நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்து ஆராய்ந்துள்ளனர்.


இந்த நிலையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அமெரிக்க தூதுவரின் கருத்துக்கள் குறித்து கரிசனை வெளியிட்டுள்ளார்.

ஆயுதமேந்தாத ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான துப்பாக்கி பிரயோகம் குறித்து வெளிப்படையான விசாரணையை அமெரிக்க தூதுவர் வலியுறுத்தியுள்ளார். ஆர்ப்பாட்டங்களிற்கான மக்களின் உரிமையை பாதுகாக்க வேண்டிய தன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார் என தனது கடிதத்தில் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

ரயர்களை எரிப்பது, வீதிகளை புகையிரத பாதைகளை மறிப்பது, எரிபொருள் நிரப்பும் நிலையங்களை அழிப்பது, பொலிஸார் மீது கற்களை வீசி எறிவது போன்றவற்றை ஆர்ப்பாட்டங்களாக அமைதியான நடவடிக்கைகளாக கருத முடியுமா என சரத்வீரசேகர தனது கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமைதியான ஆர்ப்பாட்டங்களிற்கான உரிமை குறித்து அறிக்கை வெளியிடுவதற்கு தனிநபருக்கு உள்ள உரிமை குறித்து அறிக்கை வெளியிடுவதன் நோக்கம் குறித்தும் கேள்வி எழுப்பியுள்ள சரத்வீரசேகர பொலிஸார் ஆயுதமேந்தாத ஆர்ப்பாட்டக்காரர்களை சுட்டனர் என தெரிவித்ததன் மூலம் தற்போது எங்கள் நாட்டில் வசிக்கும் தூதுவர் இலங்கை குறித்து உலகிற்கு பாதகமான செய்தியை அனுப்புகின்றார்.

தனது அறிக்கைகள் மூலம் ஜூலிசங் அரசாங்கத்திற்கு எதிரான சதி நடவடிக்கைகளிற்கு ஆதரவளித்தார் எனவும் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார். (நி-5-6)



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் விஜயதசமி -மானம்பூ உற்சவம் நேற்று காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்-சிவசாந்தன், கஜிந்தன்)

# சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச விசா

## அமைச்சரவை ஒப்புதல்

(கொழும்பு)

இந்தியா, சீனா, ரஷ்யா, மலேசியா, ஜப்பான், இந்தோனேஷியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவதற்கான இலவச விசா வழங்கும் திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், ஒரு முன்னோடித் திட்டமான இந்த திட்டம் 2024 மார்ச் 31ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை உறுதி செய்யும் முகமாக சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் செய்தியில் இதனை தெரிவித்துள்ளார்.

"சீனா, இந்தியா, ரஷ்யா, தாய்லாந்து மற்றும் இந்தோனேசியா ஆகிய ஐந்து நாடுகளுக்கு இலவச விசா அனுமதிக்கான ஏற்பாடுகள் அனைத்தும் தயாராக உள்ளது" என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கடந்த 18 ஆம் திகதி அறிவித்திருந்தார்.

மேலும் பிரதமர், சுற்றுலா மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் இணைந்து இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# கெஹலியவை கைது செய்ய வேண்டும் சரத்பொன்சேகா வலியுறுத்து

(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை கைது செய்ய வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கெஹலியவினுடைய அமைச்சுப் பதவியை மாற்றினால் எல்லாம் சரியாகிவிடாது என அவர் குறிப்பிட்டார்.

சுகாதாரத்துறையின் மீது எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கும் ஊழல்களுக்கும் பின்னணியில் கெஹலிய தான் இருந்திருக்கிறார் என அவர் இவர் மீது குற்றம் சுமத்தினார்.

மேலும், அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொன்சேகா தனது முகநூல் பக்கத்தில் சமீபத்தில் பதிவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# எல்லை தாண்டிய மீன்பிடி; 8 இலங்கை மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக 8 இலங்கை மீனவர்களை இந்திய கடலோர காவல் படை நான்கு படகுகளுடன் கைது செய்தது.

கைதானவர்கள் படகுகளுடன் மண்டபம் முகாமுக்கு அழைத்து செல்லப்பட்டு மண்டபம் மரைன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

எட்டு மீனவர்களும் காற்றின் வேகம் காரணமாக திசை மாறி இந்திய கடற்பரப்பிற்குள் மீன் பிடிக்க வந்ததாக விசாரணைகளில் தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை இந்திய கடலோர காவல் படை மற்றும் சுங்கத்துறை அதிகாரிகள் இணைந்து சர்வதேச கடல் எல்லையில் மேற்கொண்ட நடவடிக்கையில் இலங்கைக்கு கடல்அட்டை மற்றும் சமையல் மஞ்சள் கடத்திய மண்டபத்தைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இதனிடையே கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் கடத்தல் தங்கத்தை மண்டபத்தைச் சேர்ந்தவர்களிடம் கொடுத்து விட்டு அவர்களிடம் இருந்து சமையல் மஞ்சள் மற்றும் கடல்அட்டை வாங்கி செல்ல நடுக்கடலில் காத்திருந்த போது பிடிப்பட்டனரா என்ற கோணத்தில் இந்திய மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் பிடிபட்டவர்களிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-5-6-33-235)

# அரசியல் சுயநலத்திற்காகவே அமைச்சரவை மாற்றப்பட்டது

## பெரமுன சாடல்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது அரசியல் சுயநலம் கருதி தான் நினைத்த மாதிரி ஆடுகின்றார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குற்றம் சாட்டினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் பேசாமல் அமைச்சரவையை மாற்றுவதற்கு ஜனாதிபதிக்குத் துணிவு வந்துவிட்டதா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவை மொட்டுக் கட்சி திரும்பப் பெற்றால் அவர் கவிழ்ந்தே தீருவார் என்றும் ஜோன்ஸ்டன் எம்.பி எச்சரிக்கை விடுத்தார்.

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குயின்டன் டி கொக் அபார சதம்

# பங்களாதேஷை வென்றது தென்னாபிரிக்கா




குயின்டன் டி கொக்கின் அதிரடி சதம் மூலம் பங்களாதேஷை வீழ்த்தி தென்னாபிரிக்கா அபார வெற்றி பெற்றது.

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் நேற்றைய லீக் போட்டியில் தென்னாபிரிக்கா மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதின. டாஸ் வென்ற தென்னாபிரிக்கா அணி முதலில் பட்டிங்கை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் ஆடிய தென்னாபிரிக்கா அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. அந்த அணியின் ஹென்ரிக்ஸ் 12 ரன்களை எடுத்த போது அவுட் ஆகி பெவிலியன் திரும்பினார். இவரைத் தொடர்ந்து வந்த டுசென் 1 ரன்னில் நடையை கட்டினார். ஆரம்ப வீரராக களமிறங்கிய டி கொக் பொறுமையாக விளையாடி ரன் சேர்த்தார். இவர் 174 ரன்களை குவித்து ஆட்டமிழந்தார்

அதன்படி 50 ஓவர்கள் முடிவில் தென்னாபிரிக்கா அணி 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 382 ரன்களை குவித்தது. தென்னாபிரிக்கா அணியின் டேவிட் மில்லர் 34 ரன்களுடனும், மார்கோ யென்சென் 1 ரன்னுடனும் களத்தில் இருந்தனர். பங்களாதேஷ் அணி சார்பில் ஹசன் 2 விக்கெட்டுகளையும், மெஹிடி ஹசன் மிராஸ், ஷொரிஃபுல் இஸ்லாம் மற்றும் ஷகிப் அல் ஹாசன் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

அடுத்து களமிறங்கிய பங்காளதேஷ் அணிக்கு ஹசன் மற்றும் லிட்டன் தாஸ் சுமாரான ஆரம்பத்தை கொடுத்தனர். இருவரும் முறையே 12 மற்றும் 22 ரன்களில் ஆட்டமிழக்க, அடுத்து வந்த நஜ்முல் ஹுசைன் ரன் ஏதும் எடுக்காமல் பெவிலியன் திரும்பினார்.

இவரைத் தொடர்ந்து களமிறங்கிய ஷகிப் அல் ஹாசன் 1 ரன்னிலும், முஷ்ஃபிகுர் ரஹிம் 8 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த மஹ்மதுல்லா சிறப்பாக விளையாடி ரன்களை சேர்த்தார். இவருடன் ஆடிய மெஹிடி ஹசன் மிராஸ் 11 ரன்களையும், நசும் அஹமத் 19 ரன்களையும், ஹசன் மஹ்முத் 15 ரன்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

கடைசி வரை தென்னாபிரிக்காவுக்கு ஆட்டம் காட்டிய மஹ்மதுல்லா 111 ரன்களை எடுத்து ஆட்டமிழந்தார். 46.4 ஓவர்கள் முடிவில் பங்களாதேஷ் அணி 233 ரன்களை குவித்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதன் மூலம் தென்னாபிரிக்கா அணி 149 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்கா சார்பில் ஜெரால்ட் கோட்ஸி மூன்று விக்கெட்டுகளையும், ரபாடா, யென்சென் மற்றும் லிசாட் வில்லியம்ஸ் தலா இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். கேசவ் மகாராஜ் ஒரு விக்கெட் வீழ்த்தினார்.

ஆட்ட நாயகனாக சதம் கண்ட டி கொக் தெரிவானார். (ம-7)




## மரண அறிவித்தல்



மண்ணில்
1941 . 12 . 06

விண்ணில்
2023 . 10 . 23

### திருமதி அரியமலர் மனோகரன்

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை புலோலி மேற்கு, கிராமக் கோட்டடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி அரியமலர் மனோகரன் அவர்கள் 23.10.2023 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மகேஸ்வரி தம்பதியினரின் மூத்த புதல்வியும் அமரர் முருகேசு மனோகரனின் அன்பு மனைவியும் ஆனந்த கதிரமலை, ஆனந்த குமாரதாஸ், ஆனந்த பாமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமிர்தமணி, மனோன்மணி, சுந்தரராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் முருகதாஸ், சுமதி, தயானந்தன்(பெறாமகன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மப்பிரியா, கிருபாரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஹரிஸின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்
மகன் முருகதாஸ்
மகள் சுமதி
பெறாமகன் தயானந்தன்
077 344 3034

'கதிரமலை வாசம்'
புலோலி மேற்கு,
கிராமக்கோடு.

(C-7487)

## சனத் ஜெயசூர்யவின் 26 வருட சாதனை

### டி கொக்கால் முறியடிப்பு

இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூர்யவின் 26 வருட சாதனையை தென்னாபிரிக்க அணியின் ஆரம்ப துடுப்பாட்டவீரர் குயின்டன் டி கொக் முறியடித்துள்ளார்.

இந்தியாவின் வான்கடே மைதானத்தில் 26 ஆண்டுகளுக்கு முன்னர் (1997) சனத் ஜெயசூர்ய ஆட்டமிழக்காமல் 151 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இந்த சாதனை இதுவரை முறியடிக்கப்படாமல் இருந்தது.

நேற்று பங்களாதேஷிற்கு எதிரான ஆட்டத்தில் குயின்டன் டி கொக் 174 ஓட்டங்களை எடுத்து அந்த சாதனையை முறியடித்துள்ளார். (ம-7)

### உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 5 | 5 | 0 | 10 |
| 2 | தென்னாபிரிக்கா | 5 | 4 | 1 | 8 |
| 3 | நியூசிலாந்து | 5 | 4 | 1 | 8 |
| 4 | அவுஸ்திரேலியா | 4 | 2 | 2 | 4 |
| 5 | பாகிஸ்தான் | 5 | 2 | 3 | 4 |
| 6 | ஆப்கானிஸ்தான் | 5 | 2 | 3 | 4 |
| 7 | நெதர்லாந்து | 4 | 1 | 3 | 2 |
| 8 | இலங்கை | 4 | 1 | 3 | 2 |
| 9 | இங்கிலாந்து | 4 | 1 | 3 | 2 |
| 10 | பங்களாதேஷ் | 5 | 1 | 4 | 2 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டது மகிந்த ஆட்சியில் தான் - சாகர



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு திட்டத்துடன் செயற்பட்டு, கொத்மலை, நுரைச்சோலை, உமா ஓயா போன்ற பாரிய திட்டங்களை உருவாக்கி குறைந்த விலையில் நாட்டுக்கு மின்சாரம் வழங்க பாடுபட்டார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டது.

இந்த நாட்டில் மக்களுக்கு மின்சாரம் வழங்கியது மட்டுமன்றி மின்சார கட்டணத்தையும் குறைத்தவர் மகிந்த ராஜபக்ஷ எனவும் அவர் இந்த நாட்டில் மின்சார உற்பத்திக்கான திட்டங்களை முன்னெடுத்ததன் காரணமாகவே அவ்வாறு செய்ய முடிந்தது எனவும் காரியவசம் தெரிவித்துள்ளார்.

"நாட்டில் மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் பல விவாதங்கள் இடம்பெற்றுள்ளன. இதற்கு 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் குற்றம் சுமத்தினார்கள். ராஜபக்ஷக்களும் குற்றம் சுமத்தப்படுகிறார்கள். மக்கள் ஒன்றும் அறியாமல் சிந்திக்கப் பழகிவிட்டனர்.

"முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்தில் நாடு ஒரு நாளைக்கு பல மணித்தியாலங்கள் மின்சாரம் இன்றி தவிக்க வேண்டியிருந்தது.

இந்த நாட்டின் முன்னாள் தலைவர்கள் மின்சார உற்பத்திக்கான எந்த திட்டமும் இன்றி உழைத்ததால் இது நடந்தது.

ஆனால் முதல் தடவையாக மகிந்த ராஜபக்ஷ ஒரு திட்டத்துடன் பணியாற்றினார்" என அவர் புகழாரம் சூட்டினார். (நி-5-6)

# மின்கட்டண அதிகரிப்பால் மூடப்படும் அபாயத்தில் தேயிலை தொழிற்சாலைகள்



(கொழும்பு)

மின்கட்டண அதிகரிப்பினால் தேயிலை தொழிற்சாலைகளை மூட வேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக சிறுதேயிலை தோட்ட உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அதன் தலைவர் நிஷாந்த பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மின்கட்டண அதிகரிப்பிற்கு, தற்போதைய மற்றும் முன்னாள் அரசியல்வாதிகளே காரணம் என பெங்கமுவே நாலக தேரரும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# அடுத்த ஆண்டு முதல் முட்டை இறக்குமதி தேவையில்லை

## அமைச்சர் மஹிந்த அமரவீர

(கொழும்பு)

எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை மாத்திரம் இலங்கைக்கு முட்டைகளை இறக்குமதி செய்வது அவசியம் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் நுகர்வுக்குத் தேவையான அளவு முட்டைகளை ஜனவரி மாதத்திற்குள் நாட்டில் உற்பத்தி செய்ய முடியும் என அமைச்சர் தெரிவித்தார்.

இதனால், அடுத்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்குள் நாட்டில் முட்டைகள் உபரியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், வெளிநாடுகளுக்கும் முட்டைகளை ஏற்றுமதி செய்ய முடியும் என அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கைக்கு முட்டை மற்றும் அரிசி இறக்குமதி செய்யப்பட்டாலும் குறைந்த அளவு அரிசி மற்றும் முட்டையே ஏற்றுமதி செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார். (நி-5-6)

# எரிபொருள் நிரப்புநிலையங்களை இயக்குவதில் சிக்கல்

(கொழும்பு)

சமீபத்தில் மின்கட்டணம் 18 சதவீதத்தினால் உயர்த்தப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் எரிபொருள் நிரப்புநிலையங்களை இயக்குவதில் சிக்கல் ஏற்படும் என பெற்றோலிய விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நிலைமையினால் எரிபொருள் விற்பனை ஏற்கனவே பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் துணைச் செயலாளர் கபில நாவுதுன்ன தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினை நாட்டில் உள்ள அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களையும் பாதிக்கும். செலவுகள் அதிகரிப்பதுடன் தினசரி விற்பனை குறைந்து வருகிறது.

இதேவேளை, எரிபொருள் விலையை நாளாந்தம் திருத்தியமைக்கும் அரசாங்கத்தின் தீர்மானம் திருப்திகரமானது எனவும் இது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

# இலங்கைக்கு 200 மில்லியன் ஜென்னை வழங்கும் ஜப்பான்

(டோக்கியோ)

இலங்கையின் மீன்பிடித் தொழிலின் அபிவிருத்திக்காக ஜப்பானிய அரசாங்கம் தமது பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 200 மில்லியன் ஜென்னை வழங்குவதற்கு இணங்கியுள்ளது.

சுமார் 435 மில்லியன் ரூபாய் மானியம், இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனத்திற்கு இயந்திரங்கள், உபகரணங்கள்கொள்வனவிற்கு என வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது. (நி-5)

# இராசிபலன்

25.10.2023
ஐப்பசி 08, புதன்கிழமை
ஏகாதசி முற்பகல் 10.48 மணிவரை

சதயம் பிற்பகல் 12.29 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை

சந்திராஷ்டமம்- ஆயில்யம், மகம்
ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்.

வளவன்

**மேஷம்** – எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** – மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு.

**துலாம்** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.

**மகரம்** – தொழிலில் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**ரிஷபம்** – தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** – புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** – வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் நம்பிக்கை கூடும்.

**கும்பம்** – உடல் நலனில் கவனம் தேவை, புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை கூடும், போசன சுகமுண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்** – எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

**கன்னி** – கூட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு** – மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**மீனம்** – வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, ஆதாரமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

உலகம் அறிந்திரு, உழைப்பால் உயர்ந்திடு, உனக்கென ஒரு சரித்திரம் படைத்திடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணைமடுக்குள

## சிறுபோகத்தில் மோசடியில் ஈடுபட்ட அமைப்புகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை

### ரூபவதி கேதீஸ்வரன்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு சிறுபோக செய்கையின் போது மோசடியில் ஈடுபட்ட அமைப்புக்களில் முறைகேடுகளுக்கு காரணமானவர்கள் நிர்வாக பதவிகளில் இருக்க முடியாது என மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக்குளத்தின் கீழ் கடந்த சிறுபோக செய்கையின் போது புலிங்கதேவன் முறிப்பு பகுதியில் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய பங்கு உரிமைகளை குறித்த கமக்கார அமைப்பு தடுத்து அதனை விவசாயிகளுக்கு வழங்காது முறையற்ற விதத்தில் பெருந்தொகை பணத்திற்கு விற்பனை செய்துள்ளமை விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக மாவட்ட அரச அதிபரை தொடர்பு கொண்டு கேட்ட போது முறைகேடுகளை மேற்கொண்ட அமைப்புகளை நீக்கி புதிய அமைப்புக்களை தெரிவு செய்வதுடன் குறித்த முறைகேடுகளுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6-315)



கிளிநொச்சி கனகபுரம் துயிலும் இல்லத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உட்பட பலர் கலந்து கொண்டு சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (படம்: தேவானந்தன்)

## டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு
### பச்சிலைப்பள்ளியில் சிரமதானம் முன்னெடுப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி நகர் பகுதியில் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை டெங்கு ஒழிப்பு சிரமதான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு, டெங்கினைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து குறித்த சிரமதான நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

இதன்போது பச்சிலைப்பள்ளி நகர்பகுதியின் A-9 வீதியின் இரு மருங்கிலும் சிரமதானப் பணிகளினை மேற்கொண்டனர். இதில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுசுகாதார பரிசோதகர்கள், டெங்கு ஒழிப்பு பிரிவினர், பொலிஸார், இராணுவத்தினர், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-5-6-100)

## ஆவரங்கால் மத்தி முன்பள்ளி கண்காட்சி விழா நாளை

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மத்தி முன்பள்ளியின் கண்காட்சி விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மத்தி முன்பள்ளி மண்டபத்தில் முன்பள்ளித் தலைவர் தி.கமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அதிபர் பி.கமலதாசன், ஆவரங்கால் சமுர்த்தி வங்கி முகாமையாளர் சிறீதரன் ஸ்ரீகிருஸ்ணன் மற்றும் கனடா ஒன்றியத் தலைவர் சின்னத்துறை முரளிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-6)

## கடற்றொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதில் அதிகாரிகள் அசமந்தம்

### டக்ளஸ் தேவானந்தா

(தருமபுரம்)

சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதில் ஒருசில கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளின் அசமந்த நடவடிக்கைகள் காரணமாகவே கட்டுப்படுத்துவதில் நெருக்கடி நிலைமை தொடர்வதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்த தெரிவித்துள்ளார்.

முல்லை. மாவட்டத்திற்கு நேற்று காலை விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்டத்தில் கடற்றொழில் அமைச்சினால் முன்னெடுக்கவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்து விளக்கம் அளித்து கலந்துரையாடிய வேளையே அவர் மேற்கொண்ட கருத்தை தெரிவித்திருந்தார். (நி-5-6-316)

## முதல் பெண் விமானியாக
### நோர்வேயில் சாதனை படைத்த ஈழத்தவர்



(பேர்லின்)

நோர்வே நாட்டின் முதல் தமிழ் பெண் விமானியாக பட்டம் பெற்று யாழ்ப்பாணத்திற்கு பெருமை சேர்த்துள்ள குருநகரை சேர்ந்த ஷெர்லி செபஸ்தியாம் பிள்ளை.

அவர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் தனது விமான கல்வியை ஆரம்பித்து தனது ஆரம்ப பயிற்சியை Taxas அமெரிக்காவில் நிறைவு செய்துள்ளார்.

பின்னர் மீண்டும் நோர்வேயில் கல்வியை தொடர்ந்து இறுதியாக கடந்த 10 ஆம் திகதி தனது விமானத்தை ஓட்டும் பரீட்சையில் சித்தியடைந்து நோர்வே நாட்டின் முதல் தமிழ் பெண் விமானியாக பட்டம் பெற்றுள்ளார்.

தனது தந்தையின் 50 வருட கனவிற்கான இலட்சியத்தை தாண்டி சாதித்து காட்டியுள்ளார். இந்நிலையில் புலம்பெயர் தேசத்தில் சாதனை படைத்த யாழ். குருநகரை சேர்ந்த ஷெர்லி செபஸ்தியாம்பிள்ளைக்கு பலரும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் கூறி வருகின்றனர். (நி-5-6)



யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரியில் இந்திய இராணுவத்தால் கடந்த 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்களின் நினைவேந்தல் நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு முன்பாக படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு தீபமேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் படுகொலை செய்யப்பட்டோரின் உறவினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். (படம்: சிவசாந்தன்)

## பெண் ஒருவரின் சங்கிலி அறுப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் வீதியால் சென்ற பெண் ஒருவருடைய சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துச் சென்றிருப்பதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத்திற்கு அருகாமையில் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஒரு பவுண் எடை கொண்ட சங்கிலியே அறுக்கப்பட்டிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-30)

### கலாசாலை மரியன்னை ஆலய பெருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைந்துள்ள புனித மரியன்னை ஆலயத்தின் பெருநாள் திருப்பலி நாளை மறுதினம் வெள்ளி காலை 9 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

கலாசாலையின் கிறிஸ்தவ மன்ற ஏற்பாட்டில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ் மறைக்கோட்ட முதல்வரும் யாழ் பேராலய பங்குத் தந்தையுமாகிய அருட்பணி ஜே.ஜே மௌலீஷ் திருப்பலியை ஒப்புக் கொடுப்பார். கோப்பாய் பங்குத்தந்தை எம்எல்மொன்பேட் யாழ்மறைக் கல்வி நடுவு நிலைய இயக்குநர் டபிள்யூ எக்ஸ் ஜேம்ஸ் ஆகியோர் பெருநாள் திருப்பலியில் கலந்து கொண்டு ஆசி வழங்கவுள்ளனர். (நி-5-6-33)

## புதிய நிர்வாக தெரிவு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச் சங்க தலைவராக பொறுப்பு வைத்திய அதிகாரி பா.தினகரன், செயலாளராக ச.முகுந்தனும் (பிரதி அதிபர்) பொருளாளராக சு.பிரதீபனும் (மருந்து கலவையாளர்), உப தலைவராக ம.கபிலனும் (திட்ட முகாமையாளர்), உப செயலாளராக வி.சாந்தினியும் (ஆசிரியர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (நி-5-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டி விகிதங்களை குறைக்காத வங்கிகள் மீது நடவடிக்கை

## நிதி இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

வங்கி வட்டி வீதங்களைக் குறைக்காத வர்த்தக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் தொடர்பில் மத்திய வங்கி அவதானம் செலுத்தும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அவிசாவளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் வங்கி வட்டி விகிதங்கள் உயர்மட்டத்தில் இருந்த போது பெறப்பட்ட நீண்டகால வைப்புகளுக்கு வட்டி செலுத்துவதில் வர்த்தக வங்கிகளும் சில சிக்கல் நிலைமைகளை எதிர்நோக்க நேரிட்டது.

எவ்வாறாயினும், மத்திய வங்கியினால் வழங்கப்படும் வங்கி வட்டி விகிதங்களுக்கு அமைய வர்த்தக வங்கிகள் செயற்படும் என பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

எனினும் மக்களின் நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு மத்திய வங்கி வட்டி வீதத்தை குறைத்துள்ளதால், அனைத்து அரச மற்றும் தனியார் வர்த்தக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களும் சுற்றறிக்கைக்கு அமைவாக செயற்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.

எனவே, அந்த வங்கிகளின் வட்டி விகிதங்களைக் குறைக்க உடனடியாக கடுமையான மற்றும் நேரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, சீரற்ற காலநிலையால், பெரும்போகத்தில் சுமார் 58 ஆயிரத்து 770 ஏக்கர் நிலப்பரப்புகள் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 53 ஆயிரத்து 956 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவ தற்கு விவசாய அமைச்சினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (நி-5-6)

# இந்த வருடத்தில் இதுவரை 400 யானைகள் உயிரிழப்பு

## வனஜீவராசிகள் திணைக்களம்

(கொழும்பு)

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 400 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யானை - மனித மோதலினால் சுமார் 200 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டார குறிப்பிட்டுள்ளார்.

பல காட்டு யானைகள் துப்பாக்கிச்சூடு மற்றும் வீதி விபத்துகளில் உயிரிழந்துள்ளதுடன் வெவ்வேறு நோய்களாலும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் 6000 யானைகளே இருப்பதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மனித நடவடிக்கைகளின் காரணமாக வசிப்பிடங்களை இழந்துள்ள காட்டு யானைகள் கிராமங்களுக்குள் ஊடுருவும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# மின்கட்டண உயர்வுக்கு எதிராக தொடரும் போராட்டங்கள்



(கொழும்பு)

மின் கட்டண உயர்வுக்கு எதிராக நேற்று முன்தினம் இரவு தீப்பந்தப் போராட்டம் ஒன்று தேசிய மக்கள் சக்தியினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டமானது ஹைலெவல் வீதியின் பன்னிப்பிட்டிய அரச மரத்திற்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மின்கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்டுகஸ்தொட்டை பகுதியிலும் தீப்பந்தம் ஏந்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (நி-5-6)

# செவிலியர்கள் 60 வயதில் ஓய்வு; தீர்மானத்தை ரத்து செய்த நீதிமன்றம்

(கொழும்பு)

அரச தாதியர் சேவையில் தரம் நான்கு செவிலியர்களை 60 வயதில் கட்டாயமாக ஓய்வுபெறச் செய்ய எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய உத்தரவில், ஏற்கனவே ஓய்வு பெற்ற அந்தந்த பதவிகளில் உள்ள அதிகாரிகளை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த தீர்ப்பை வழங்கியது. (நி-5-6)

# இலங்கையில் சீனாவின் துறைமுக நகரத்திற்கு ஆதரவளிக்கும் பிரிட்டன் முன்னாள் பிரதமர்

## பிரிட்டனின் தமிழ் கென்சவேர்ட்டிர்கள் கடும் அதிருப்தி

(லண்டன்)

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன் கொழும்பு துறைமுக நகர திட்டத்தினை அங்கீகரிக்கும் விதத்தில் செயற்படுவது குறித்து பிரிட்டனின் தமிழ் சமூகம் கடும் ஏமாற்றமடைந்துள்ளது என தமிழ் கார்டியன் செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவின் புதிய பட்டுப் பாதை திட்டத்தின் ஒரு பகுதியான கொழும்பு துறைமுக நகர திட்டத்திற்கு டேவிட் கமரூன் ஆதரவளிப்பது குறித்து பிரிட்டனின் தமிழ் சமூகத்தினர் ஆழ்ந்த ஆச்சரியமும் திகைப்பும் அடைந்துள்ளனர் என பிரிட்டிஸ் தமிழ் கென்சவேர்ட்டிவ்களின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இன்னமும் பொறுப்புக்கூறலையும் நீதியையும் வழங்காத போதிலும் டேவிட் கம்ரூன் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளிற்கு ஊக்கமளிப்பதை நாங்கள் காண்கின்றோம் எனவும் தெரிவித்துள்ள அவர் இது ஆழ்ந்த மன உளைச்சலை ஏற்படுத்துகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

டேவிட் கமரூன் இனப்படுகொலை குற்றச்சாட்டுகளிற்கு உள்ளாகியுள்ள நாடுகளின் திட்டங்களிற்கு உதவுவதற்கு பதில் மனித உரிமை நீதி போன்ற உயர் நோக்கம் கொண்ட் கொள்கைகளிற்க குரல்கொடுப்பதில் மீண்டும் ஈடுபடுவார் என எதிர்பார்க்கின்றோம்.

பிரிட்டனில் 13 வருட காலமாக கென்சவேர்ட்டிவ்கள் ஆட்சி புரிகின்றனர். இன்றுவரை யுத்த குற்றங்களிற்காக இலங்கையை சேர்ந்த ஒரு இராணுவ அதிகாரி அல்லது அதிகாரிக்கு எதிராக தடைகள் விதிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ள அவர் மனித உரிமை மீறல்களை கருத்தில் கொள்ளாமல் பிரிட்டனிற்கும் இலங்கைக்கும் இடையில் வர்த்தக உறவுகள் அதிகரிப்பதை நாங்கள் பார்க்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 350 |
| தக்காளி | 250 | 250 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 160 |
| கோவா | 250 | 200 | 200 |
| கரட் | 250 | 300 | 320 |
| பூசணி | 80 | 80 | 80 |
| புடோல் | 180 | 250 | 120 |
| வாழைக்காய் | 200 | 180 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 250 |
| பாகற்காய் | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 120 | 200 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 450 | 400 | 300 |
| லீக்ஸ் | 200 | 160 | 150 |
| பீற்றூட் | 100 | 140 | 120 |
| கறிமிளகாய் | 350 | 350 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 280 | 250 |
| போஞ்சி | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 240 |
| கீரை - 1 பிடி | 100 | 70 | 60 |
| தேசிக்காய் | 1200 | 1300 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 70 |
| இராசவள்ளி | 400 | 450 | 500 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 500 |
| முள்ளங்கி | 100 | 140 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 |
| வல்லாரை | 40 | 30 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## தாக்குதலைத் தீவிரப்படுத்தும் இஸ்ரேல்
## ஐ.நா நாளை அவசரக்கூட்டம்

(நியூயோர்க்)

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் படைகளுக்கு இடையேயான போர் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாகத் தொடர்ந்து வரும் நிலையில் இஸ்ரேல் தீவிரமாகத் தாக்குதல்களை தீவிரப்படுத்தி உள்ளதால் அங்கே பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் பொதுசபையின் 10 ஆவது அவசர சந்திப்பு நாளை நடைபெறும் என அதன் தலைவர் டென்னிஸ் பிரான்சிஸ் அறிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொது சபையின் உறுப்பு நாடுகள் அவசர சந்திப்பிற்கு ஐ.நா பொதுசபைக்கு கோரிக்கை வைத்தன. இக்கோரிக்கையை ஏற்று அவசர கூட்டம் நாளை நடத்தப்படும் என தனது அதிகாரபூர்வ எக்ஸ் கணக்கில் டென்னிஸ் பதிவிட்டுள்ளார்.

கடந்த 2022 பெப்ரவரி மாதம் தனது அண்டை நாடான உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமித்ததையடுத்து அவசர கூட்டம் நடைபெற்றது.

உலக சூழலுக்கு ஏற்ப 24 மணி நேரத்திலேயே அவசர கூட்டத்திற்கு அழைப்பு விடுக்க ஐ.நா பொதுசபைக்கு அதிகாரம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# பங்களாதேஷில் ரயில்க

- 17 பேர் உயிரிழப்பு
- சுமார் 100 பேர்



(டாக்கா)

பங்களாதேஷில் இரு
இடம்பெற்ற விபத்தி
உயிரிழந்துள்ள நிலை
காயமடைந்துள்ளனர்.

பங்களாதேஷின் டாக்கா மாகாணம் கிஷோர்கஞ்ச் மாவட்டம் பைரப் ரயில் நிலையத்தில் இருந்து எக்ஸ்பிரஸ் ரயில் பயணித்து சில நிமிடங்களில் மாற்று தண்டவாள பாதைக்காக பயணத்தடம் மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

மாற்று தண்டவாளத்தில் எக்ஸ்பிரஸ் ரயில் தடம்மாறிக் கொண்டிருந்தபோது திடீரென எக்ஸ்பிரஸ் ரயில் தண்டவாளத்தில் சரக்கு ரயில் வேகமாக வந்தது. எக்ஸ்பிரஸ் ரயில் முழுமையாக மாற்று தண்டவாளத்திற்கு செல்வ

# ஹமாஸின் டிரோன் தாக்குதலை முறியடித்த இஸ்ரேல் இராணுவம்



(ஜெருசலேம்)

ஹமாஸ் நடத்திய டிரோன் தாக்குதலை முறியடித்து விட்டதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே கடந்த சில வாரங்களாக போர் நடைபெற்று வருகிறது. இரு தரப்பும் மாறி மாறி தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்தப் போரில், பொதுமக்கள், குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

போர் இன்னும் முடிவு க்கு வராத நிலையில் காசா எல்லை அருகில் இருக்கும் இஸ்ரேல் இராணுவ நிலைகளை குறிவைத்து ஹமாஸ் டிரோன் தாக்குதல் நடத்தியது. ஹமாஸ்இன் ஆயுத பிரிவு அல்குவாசம் பிரிகேடிஸ் இந்த டிரோன் தாக்குதலை நடத்தி இருக்கிறது. இஸ்ரேலின் ஹிட்சிரம் நகரில் உள்ள விமானப்படைத் தளம், தஸ்லிம் நகரில் உள்ள இராணுவப்படை தளத்தை குறிவைத்தே ஹமாஸ் இந்த தாக்குதலை நடத்தியது.

காசாவில் இருந்து ஏவப்பட்ட இரண்டு டிரோன்களும் நிர் ஒஸ் மற்றும் என் ஹபிசர் பகுதியில் சுட்டு வீழ்த்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

## விண்வெளியில்
# விளைந்த காய்கறிகளை அறுவடை செய்த சீனா



(பீஜிங்)

சீனா விண்வெளியில் காய்கறிகளை பயிரிட்டு அறுவடை செய்துள்ளது.

விண்வெளியை ஆராய்வதற்காக பல நாடுகளும் விண்கலங்களை அனுப்பி வரும் நிலையில் சீனா, தனக்கு சொந்தமாக விண்வெளி ஆய்வு மையத்தை அமைத்து உள்ளது. விண்வெளியில் டியாங்காங் என்ற ஆய்வு மையத்தை உருவாக்கி ஆய்வு செய்து வருகிறது. இதற்காக சீன விண்வெளி வீரர்கள் அங்கு தங்கி உள்ளனர்.


கடந்த மே மாதம் 30 ஆம் திகதி, ஷென்சோ-16, விண்கலத்தில் விண்வெளி வீரர்களான ஜிங் ஹைபெங், ஜூ யாங்சு மற்றும் சீனா ஏரோனாட்டிக்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் குய் ஹைச்சாலோ ஆகிய 3 பேர் பயணம் செய்து சீன விண்வெளி ஆய்வு மையத்துக்கு சென்றிருந்தனர்.

அங்கு கீரை, சின்ன வெங்காயம், செர்ரி, தக்காளி செடிகளை வளர்த்தனர். பூமியில் தேவையான சூரிய வெளிச்சம், தண்ணீர் இருப்பதால் செடிகள் எளிதில் வளரும். ஆனால் விண்வெளியில் இந்த சாத்தியக்கூறுகள் இல்லாததால் சீனா சிறப்பு ஏற்பாடுகளை செய்து இந்த செடிகளை பயிரிடுவதற்கான சிறப்பு சாதனத்தை உருவாக்கி இருந்தது.

தாவர வளர்ச்சிக்குத் தேவையான வெப்பநிலை, ஈரப்பதம், ஒட்சிசன், கார்பனீரொட்சைட்டு உள்ளிட்டவை சரியான அளவில் கிடைக்கும் வகையில் உருவாக்கப்பட்டு இருந்தது. அவர்கள் பயிரிட்ட பயிர்கள் நன்கு வளர்ந்துள்ளது.

இதையடுத்து அவற்றை அவர்கள் அறுவடை செய்துள்ளனர். இந்த குழுவினர் விண்வெளியில் ஆய்வை முடித்துவிட்டு அடுத்த மாதம் பூமிக்கு வர உள்ளனர். முன்னதாக விண்வெளியில் காய்கறி செடிகளை வளர்த்து அறுவடை செய்யும் முயற்சியில் அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய விண்வெளி வீரர்கள் சாதனை படைத்து இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ஐ.நா அமர்வின் போது
## கண்கலங்கிய பாலஸ்தீன பிரதிநிதி




(நியூயோர்க்)

ஐ.நாவின் மூன்றாவது குழுவான சமூக, மனிதநேய, கலாசாரக் கூட்டத்தில், காஸாவில் தற்போது இருக்கும் சூழ்நிலையைப் பற்றிப் பேசிய பாலஸ்தீன பிரதிநிதி சஹர் கே.ஹெச். சாலெம், கண்ணீர் விட்டு அழுதுள்ள வீடியோ தற்போது பேசுபொருளாகியுள்ளது.

இதன்போது தொடர்ந்து பேசிய அவர், காசாவில் பாரபட்சமின்றி, பெண்கள், குழந்தைகள் ஆகியோர் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

இதனிடையே காஸாவில் உள்ள பல மருத்துவ மனைகளுக்கு அருகில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த மருத்துவமனைகளில் காஸாவின் மிகப் பெரிய மருத்துவ வளாகமான அல்- ஷிஃபா, அல்-குத்ஸ் மற்றும் இந்தோனேசிய மருத்துவமனை ஆகியவை அடங்கும் என்று பாலஸ்தீனிய ஊடகங்களை மேற்கோள் காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

ஹ
இஸ

(ஜெரு
ஹம
ரான போ
தற்காக
சிதறிக்
தற்போ
வதாக
செய்தி
லொ
யோர்க்
பாங்கொ
இஸ்ரே
வரும்
அமைப்
இஸ்ரே
வந்த இ
பியுள்ள
க்களத்
காமல்
கைகள்
அ
களின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...கள் மோதி கோரவிபத்து

### ...ழப்பு
### ...பேர் படுகாயம்

**... இரு ரயில்கள் மோதி ...த்தில் சுமார் 17 பேர் ...நிலையில், நூறு பேர் ...னர்.**



...தில் ...து. ...ாக ...ல்வ தற்கு முன் அதில் சரக்கு ரயில் வந்தது.

இதில், எக்ஸ்பிரஸ் ரயிலின் பெட்டிகள் மீது சரக்கு ரயில் வேகமாக மோதியது. இந்த கோர விபத்தில் எக்ஸ்பிரஸ் ரயில் பெட்டிகள் தடம்புரண்டன.

இந்த விபத்தில் எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணித்த 17 பேர் உயிரிழந்தனர். மேலும், 100 பேர் படுகாயமடைந்தனர்.

விபத்து குறித்து தகவலறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதித்தனர். (நி-5-6)

## இஸ்ரேல்-ஹமாஸ் மோதல் தொடர்பில் ஒபாமா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

காசா மீதான இஸ்ரேலின் முற்றுகையால் எதிர் விளைவுகள் ஏற்படலாம் என அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இது குறித்து முன்னாள் ஜனாதிபதி ஒபாமா மேலும் கூறுகையில்,

இஸ்ரேல் காசாவை முற்றுகையிட்டுள்ளமையும் விமானக்குண்டுவீச்சுகளும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தலாம் என தெரிவித்துள்ள பராக் ஒபாமா, இது இறுதியில் மத்தியகிழக்கில் அமைதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான நீண்டகால முயற்சிகளிற்கு பாதிப்பு ஏற்படுத்தலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.



நாங்கள் இஸ்ரேலிற்கு ஆதரவளித்தால் கூட இஸ்ரேல் ஹமாசிற்கு எதிரான யுத்தத்தை எவ்வாறு முன்னெடுக்கின்றது என்பது குறித்து நாங்கள் தெளிவாகயிருக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தனது மக்களை இவ்வாறான வன்முறைகளில் இருந்து பாதுகாப்பதற்கான இஸ்ரேலின் உரிமையை அவர் நியாயப்படுத்தியுள்ளார். (நி-5-6)

## ஹமாஸ் அமைப்பிற்கு எதிராக போரிட இஸ்ரேலுக்கு வந்து குவியும் யூதர்கள்

(ஜெருசலேம்)

ஹமாஸ் அமைப்பிற்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்பதற்காக உலகம் முழுவதும் சிதறிக் கிடக்கும் யூதர்கள் தற்போது இஸ்ரேலுக்கு வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லொஸ் ஏஞ்சல்ஸ், நியூயோர்க், லண்டன், பாரிஸ், பாங்கொக், ஏதென்ஸில் இருந்து இஸ்ரேலின் டெல் அவிவ் வரை வரும் விமானங்கள் ஹமாஸ் அமைப்பின் பிடியில் இருந்து இஸ்ரேலை காப்பாற்ற முன்வந்த இஸ்ரேலியர்களால் நிரம்பியுள்ளதாகவும் அவர்கள் போர்க்களத்திற்கு செல்லவும் தயங்காமல் இருப்பதாக ஊடக அறிக்கைகள் விளக்கியுள்ளன.

அமெரிக்க ஊடக அறிக்கைகளின்படி அமெரிக்காவில்




உள்ள 10,000 இற்கும் மேற்பட்ட யூதர்கள் வழக்கமான பயணிகள் விமானங்கள் விமானங்கள் மூலம் இஸ்ரேலில் உள்ள டெல் அவிவ் நகருக்கு வந்துள்ளனர் எனவும் இஸ்ரேல் அரசு 3,60,000 பேரை அந்நாட்டின் கூடுதல் இராணுவ பட்டாலியன்களில் பணிபுரிய அழைத்துள்ளதாகவும் வெளிநாட்டில் வசிக்கும் அவர்களில் பெரும்பாலானோர் ஏற்கனவே இஸ்ரேலுக்கு திரும்பி விட்டதாகவும் இஸ்ரேல் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## பிரான்ஸ் ஜனாதிபதி இஸ்ரேலுக்கு விஜயம்



(டெல் அவிவ்)

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான தொடரும் தாக்குதலுக்குப் பிறகு இரு தரப்பிலும் பலி எண்ணிக்கை 6,500ஐ கடந்துள்ளது.

இந்நிலையில், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மேக்ரான் நேற்று இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் நகரை சென்றடைந்தார்.

அவரை தூதரக அதிகாரிகள் வரவேற்றிருந்தனர். அவர் இஸ்ரேல் பிரதமரை சந்திப்பதுடன் பாலஸ்தீன தலைவர்களையும் சந்திக்க உள்ளார்.

ஏற்கனவே அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் ஆகியோர் இஸ்ரேல் சென்று அந்நாட்டின் தலைவர்களை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## ஈரானின் ஆதரவில் இயங்கி வருகின்ற ஹமாஸ் அமைப்பு- குற்றம்சாட்டும் அமெரிக்கா



(வோஷிங்டன்)

ஹமாஸ் அமைப்புக்கு பல ஆண்டுக்ளாக ஈரான் ஆதரவளித்து வருகிறது என அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த விடயத்தை அமெரிக்க தேசிய பாதுகாப்பு சபையின் செயற்றிட்ட தொடர்புகளுக்கான ஒருங்கிணைப்பாளர் ஜான் கிர்பை செய்தியாளர்கள் சந்திப்பில் நேற்று பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் மீது கடந்த 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏவுகனைகளை வீசி தாக்குதல் நடத்தியது.

அதனை தொடர்ந்து, இஸ்ரேல் அரசும் இதற்கு பதிலடி கொடுத்து வருகிறது. இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பிற்கு இடையேயான மோதல் தொடர்ந்து வருகின்ற நிலையில் இஸ்ரேலுக்கு போர் கப்பல் உட்பட ஆயுத உதவிகள், நிதி உதவிகளை அமெரிக்கா வழங்கி வருகிறது.

இந்நிலையில், அமெரிக்க தேசிய பாதுகாப்பு சபையின் செயற்றிட்ட தொடர்புகளுக்கான ஒருங்கிணைப்பாளர் ஜான்கிர்பை கூறுகையில்,

"ஹமாஸ் அமைப்பிற்கு, ஈரான் பல ஆண்டுகளாக ஆதரவளித்து வருகிறது. இரு தசாப்தங்களாக இந்த ஆதரவு உள்ளது. ஈரான்இன்றிஹமாஸ்அமைப்பினரால் தொடர்ந்து செயற்படவே முடியாது எனக் கூறினார்.

இஸ்ரேலுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா வழங்கி வருவதற்கு எதிராக சில தினங்களுக்கு முன்பு, ஈரான் எச்சரிக்கை விடுத்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதனநாரும் நனிசிறக்கும் நம்மவர் தொழில் வாண்மையும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

வளமான எமது தேசத்தை வளங்கொளிக்கும் பிரதேசமாக எம்மவர் உற்பத்தியினூடு ஊக்குவிப்போம். தொழில் தேடியோடும் எம்மவர்களுக்கு எங்களது வளத்தை இனங்காணவும் அதனை வினைத்திறனாக பயன்படுத்தவும் இன்னமும் தெரியாதிருக்கின்றது.

இன்னொருவர் நிறுவனத்தில் பணிபுரியவே அனைவரினதும் மனம் ஏங்குகின்றது. சுயமாக தொழில் முயற்சியை உருவாக்கும் உத்திகளை எம்மவர்கள் கண்டும் காணாமல் விடுவதும் அந்த உற்பத்திகளை வாங்கி எமது பிரதேசத்து உற்பத்தித்திறனை மேம்படுத்த உதவுவதில்லையே எனும் கேள்வி பலமாகவே எழுகின்றது.

தொழில் வ்ாண்மைக்கான அடித்தளத்தை இட்டுக் கொடுக்கும் ஆலோசனையை காத்திரமாக வழங்கும் நிறுவனத்தின் பற்றாக்குறையின் விளைவே இவ்வாறான தொழில்களை மக்களாக முனைப்புடன் உருவாக்காமல் எமது சூழலுக்கிணைவற்ற உற்பத்திகளை பிற இடங்களிலிருந்து தருவிக்கவும் அதன் பயன்பாட்டை பெருக்கவும் முனைகின்றனர்.


இயற்கையான நார் (Natural fibre) உற்பத்தியில் பல தாவரங்களை தற்போது பயன்படுத்த தொடங்கி விட்டனர். தாவரத்தின் அனைத்து பாகங்களிலிருந்தும் நார்களை பிரித்தெடுத்து அழகான மற்றும் தினமும் பயன்படுத்தப்படும் பொருட்களைத் தயாரிக்க தொழில் முனைப்பு மிகவும் அவசியமாகின்றது.

உற்பத்திப் பொருளொன்றின் இறுதி வடிவம் மக்களைக்கவருவதற்கும்அதனை வாங்கி பயன்படுத்துவதற்கும் மிகவும் அவசியமானதாகும். அந்த வகையில் இறுதி வடிவத்தை மெருகேற்றி சிறந்த தரமான உற்பத்தியாக மாற்றும் எளிய தொழில்நுட்பம் கொண்டு வரப்பட வேண்டும். அல்லது கண்டுபிடிக்கப்படல் வேண்டும். எம்மவர்களின் உற்பத்திப் பொருட்கள் தரமானதாக இருப்பின் அதற்கு நிச்சயமாக அதிக தேவையும் வரவேற்பும் கிடைக்கும். இலையிலிருந்து, இலைக்காம்பிலிருந்து, தண்டிலிருந்து, வேரிலிருந்து, காயிலிருந்து, பழத்திலிருந்து இன்னும் மடலிலிருந்து என தாவரத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் நார் பிரிக்கப்பட்டு பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

இந்த வகையில் பருத்தி, பனை, தென்னை, கமுகு, கற்றாளை, சணல், ஜூற், மெஸ்ரா, அன்னாசி, வாழை, இலவு, பீர்க்கு, பிரம்பு, புற்கள் இன்னும் பல தாவரங்கள் இந்த நார் உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை தவிர நார்களை பிரித்தெடுக்கக் கூடிய தாவரங்கள் பல இருக்கின்றன.

அவற்றை இனங்கண்டு அவற்றிலிருந்து நாரை பிரித்தெடுக்கும் பக்குவத்தைக் கற்றுக் கொண்டால் பலருக்கு கிராமத்து தொழில் வாய்ப்பினைக் கொடுக்க வழியிருக்கின்றது. நகரத்தை நோக்கிய நகர்வை மட்டுப்படுத்த கிராமங்களை நகரத்துக் கிணைவான வசதி வாய்ப்புக்களுடன் மாற்றியமைத்தால் மக்கள் நகர்வது மட்டுப்படுத்தப்படுவதுடன் கிராமத்து தொழிற்றுறை விருத்தியடையும் வாய்ப்பும் அதிகரிக்கும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



இவ்வாறான சமாந்தர அபிவிருத்தி (Horizontal development) அடிமட்டத்தில் நடைபெற வேண்டும் என்னும் அவா அங்கிருக்கும் இளையவர்களுக்கு உண்டு. இதுவொன்றும் புதியதல்ல மொரீசியஸ் நாடு ஆரம்பத்தில் விவசாய நாடாக அங்கீகரிக்கப்பட்டு தற்போது அனைத்து கிராமங்களும் புத்துணர்வோடு நகரத்துக்கீடான வளர்ச்சியை கண்டிருக்கின்ற அதே வேளையில் சுற்றுலாத் துறையை முழுவதுமாக அபிவிருத்தி செய்து அதில்மக்களின் வாழ்வாதாரம் பல்கிப் பெருக வழிசமைத்திருக்கின்றது.

எமது பிரதேசத்தில் எங்களுர் வளங்களை முன்னிறுத்திய தொழிற்றுறை அபிவிருத்தியுடன் அல்லல்படும் மக்களின் வருவாய் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வழிவகைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

வாழைநாரின் (Banana fibre) பிரயோகம் அனைவரையும் பிரமிக்க வைத்திருக்கின்றது. வாழைநார் புடவைகளுக்கு மவுசு அதிகமானதுடன் விதம்விதமான நிறங்களில் இன்னும் அதனது மென்மை மெல்லியலாளர்களையும் கவர்ந்திழுக்க வைத்திருக்கின்றது. வாழை நாரை பதப்படுத்தி எடுக்கும் முறையே தனி. ஒரு காலத்தில் வாழைமடல் எதற்கும் பயன்படாது என குப்பையாக மண்ணினுள் தாழ்த்த காலம்போய் இப்போது அதிலிருந்து விதம் விதமான நார்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றனர்.

வாழை மடலில் உட்பகுதியில் மென்மையான நாரும் வெளிப் பகுதியிலிருந்து சற்று கடினமான நாரும் பெறப்படுகின்றது. இந்நாரில் 70 சதவீதம் செலுலோசும் 12.6 கெமி செலுலோசும் மிகுதி (7.4%) லிக்னினும் ஆகும். கிராமத்து எளிய தொழில்நுட்பம் மூலம் இது நடைபெறுகின்றது. இந்தியாவில் தமிழ்நாட்டில் இதற்கென பல தொழிற்சாலைகள் கிராம மட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எமது நாட்டின் திறந்த பல்கலைக்கழகத்தில் இதற்கென ஒரு துறையும் ஒரு பகுதியாக பட்டப்படிப்பினுள்ளும் இதனை உட்புகுத்தியிருக்கின்றார்கள். விருப்பமுடையவர்கள் தெரிவு செய்து பயிலலாம்.

வாழைநார்களின் தரமறிந்து நெய்யப்படும் புடவைகள் மற்றும் ஏனைய உடுபுடவைகள் மிகவும் மென்மையானதாகவும் விதம் விதமாக நிறங்களில் ஜொலித்துக் கொண்டிருப்பதனை அவதானிக்கலாம்.

இங்கும் இந்த முயற்சி ஒரு சிலரால் கைகூடியிருக்கின்றது. அனால் அவற்றை வாங்கிப் பயன்படுத்தும் போதுதான் அவர்களுக்கான ஊக்கம் அதில் வெளித்தெரிவதுடன் அவர்களின் கடின உழைப்புக்கான ஊதியமும் ஆதாயமும் கிடைக்கும். கிராமத்து தொழில்நுட்பமாகவே இன்னமும் பரிணமிக்கும் இத்தகைய நாருற்பத்தி இன்னமும் புத்தாக்கங்களை உள்வாங்கி புதுப்புது சேதனப் பொருட்களை உருவாக்கும் வண்ணம் மிளிர வேண்டும். எம்மினிய மக்காள் உங்களின் கண்டுபிடிப்புக்களை இதிலும் செய்யலாமே.

நாருற்பத்தியில் முன்னிலையிலுள்ள நாடு சீனா. 2021 ஆம் ஆண்டு தகவலின்படி உலக உற்பத்தியான 113 மில்லியன் தொன்கள் உற்பத்தியில் 73 சதவீதமான நார் உற்பத்தி சீனா நாட்டிலேயே நடைபெறுகின்றது. இதில் அதிகளவில் உற்பத்தியாவது பருத்தியில் தான். தங்கநார் எனப்படுவது ஜூட் (JUTE) எனப்படும் தண்டுநார் உற்பத்தி செய்யும் தாவரமாகும். இந்நாரில் லிக்னினும் செலுலோசும் நிறைவாக இருக்கின்றன.

இதனை அதிகமாக உற்பத்தி செய்வது இந்தியாவும் பங்களாதேஷூம் ஆகும். அதனால் ஜூட்டினை பங்களாதேஷ் நாட்டின் தங்கநார் (Land of Golden fibre) என அழைப்பர்.

எமக்கிருக்கும் அதீத வளமான பனை, தென்னையிலிருந்து நாரினைப் பெற்று விதம்விதமான பொருட்களை உருவாக்கும் தொழில்நுட்பம் இன்னும் முழுமையாகத் தேவை.

பிறநாடுகளில் பல வகையான தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றை பயன்படுத்தி தொழிற்றுறையை அதிகரித்திருக்கின்றார்கள். ஆனால் பனையிலிருந்து இன்னும் தரமான நாருற்பத்தியும் அதனைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பொருட்களும் உலக சந்தையை எட்டிப் பார்க்கவில்லை. இலிக்னின் அதிகமான நார்களானதால் இவற்றை புடம் போட்டு பதப்படுத்தி சிறந்த நாரை பெற வழி செய்தால் பனைவளத்தின் பெருமை உலகளவில் உச்சந் தொடும். எமது வளங்களை வினைத்திறனாக புத்தாக்கமாக உருவாக்குவதற்கு அனைவரதும் முயற்சி தேவை. பனை தென்னை ஆராய்ச்சியில் இதற்கு முன்னுரிமை கொடுக்கப்படல் வேண்டும். தொழிற்றுறை சார்ந்து உயர்வான சூழலுக்கு இணைவான உற்பத்திகளைப் பெருக்குவதற்கு வழிசெய்தல் வேண்டும்.

பருத்தியுடன் தற்போது இலவம் பஞ்சுக்கு மவுசு அதிகமாகி வருகின்றது. படுக்கை மெத்தையிலிருந்து தலகாணி வரை இதனது மென்மைத் தன்மை காரணமாக இதனது கேள்வி அதிகரித்துள்ளது. சாதாரணமாக சாலையோரத்தில் நடப்பட்டிருக்கும் இத்தகைய மரங்கள் அங்குவாழும் மக்களுக்கான அவர்கள் தொழிற்றுறைக்கான இடுபொருட்களாக மாறியதால் அவர்களும் அவ்வாறான மரங்களை நடவுசெய்து பாதுகாத்தும் வந்தனர்.

காலவோட்டத்தில் திணைக்களங்கள் உருவாகி அவற்றில் சட்டதிட்டங்கள் நடைமுறையானதால் இத்தொழிற்றுறை இன்று கவனிப்பாரற்று அநாதரவாகியிருக்கின்றது. ஏனைய நார் உற்பத்தியை பெருக்க பயனற்றதென ஒதுக்கப்பட்ட நிலத்தில் இவ்வாறான மரங்களை நடுகை செய்து பயனை பெற வாய்ப்புக்கள் உண்டு.


எந்த தொழிற்றுறையாயினும் உணவுத் தேவைக்கு முன்னுரிமை கொடுத்து அந்தந்த தொழிற்றுறை வளர ஏனைய பயிர்களை அவற்றுக்கான தகுந்த இடங்களில் நடவுசெய்தல் அவசியமானது.

பல வழிகளிலிருந்தும்அவற்றை நாம் பயன்படுத்தாமல் தொழிற்றுறைக்கான உந்துதல் இல்லாமல் தொழிலுக்காக பலர் அங்கலாய்ப்பதற்கு பதிலாக உலகத்தரம் வாய்ந்த பொருட்களை எமது தேசத்தில் உருவாக்க வழிசெய்வோம். அவற்றை உலக சந்தையில் சந்தைப்படுத்துவதற்கும் வழிசமைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்காத வரை பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது

## சிறீதரன் எம்.பி



(கிளிநொச்சி)

**இலங்கையினுடைய அமைச்சர்கள் மாறினால் என்ன, ஜனாதிபதி மாறினால் என்ன, அவர்கள் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை முன்வைக்காத வரைக்கும் ஒரு நீதியான, பொருளாதாரத்தை கட்டியெழுப்பக்கூடிய வல்லமையுள்ள அரசை உருவாக்க முடியாது என்பது தான் யதார்த்தம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

இந்த யதார்த்தத்தை சிங்கள தலைவர்கள் எப்போது புரிந்து கொள்ளுகின்றார்களோ அப்போதுதான் இந்த அரசியல் மாற்றங்களோ, அமைச்சர் மாற்றங்களோ இந்த நாட்டிற்கு அபிவிருத்தியாக மாறும். கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னை தற்பாது காத்து கொள்வதற்காகவும் தன்னுடைய இருப்பை பேணிக்கொள்வதற்காகவும் பல கைங்கரியங்களை ஆற்றுகின்றார்.

ஒரு சில விடயங்களை பொதுஜன பெரமுனவுடைய நடவடிக்கைகளுக்கு எதிராகவும் அதனுடன் தன்னுடைய அரசியல் ஸ்திரத்தை பேணுவதற்காகவும் அவர் எடுத்துள்ள மாற்றங்களில் ஒன்றாகத்தான் இந்த அமைச்சரவை மாற்றம் தென்படுகின்றது எனத் தெரிவித்தார். (நி-5-6)



## ரூ.15 லட்சம் பெறுமதியான தங்கூசி வலைகள் மீட்பு

(தருமபுரம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளத்தில் கிளிநொச்சி பிராந்திய தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையினர் நேற்று அதிகாலை மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது சுமார் 15 லட்சம் பெறுமதியான தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளுடன் 300 கிலோவிற்கு மேற்பட்ட மீன்களும் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பிராந்திய தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் குமாரகுலசிங்கம் சங்கீதன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட வலைகள் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளனர். (நி-5-6-316)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2948

**சனா**





**தனுசியா**




**கமல்**




**சாந்தன்**




**சன்ஜீவ்**




**ராஜ்**





நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன் பாகம் - 2

காவியத் தொடர் 317





"அழகாயிருக்கிறது! சுந்தரசோழ சக்ரவர்த்தியைச் சிறை வைக்க இந்திராதி தேவர்களாலும் முடியாது. சிறிய மனிதர்களால் எப்படி முடியும்? நான் அதைப் பற்றிச் சொல்லவில்லை. சௌந்தர்ய தேவதையான நந்தினி தேவியைப் பற்றிச் சொன்னேன்."

"நன்றாகச் சொல்லுங்கள், தேவி! அவர் காது பட இதைச் சொல்லுங்கள். என்னைச் சிறையில் வைத்திருப்பது போலத்தான் பழுவூர் அரசர் வைத்திருக்கிறார். தாங்கள் கொஞ்சம் சிபாரிசு செய்து."

"என் சிபாரிசு என்னத்துக்கு ஆகும்? தங்களை வைத்திருப்பது சாதாரணச் சிறையல்லவே? காதல் என்னும் சிறையல்லவா அதிலும்."

"ஆம், தேவி! அதிலும் கிழவருடைய காதல் சிறையாயிருந்துவிட்டால் விமோசனமே இல்லை. ஏதோ பாதாளச் சிறை என்கிறார்களே? அதில் அடைக்கப்பட்டவர்களாவது வெளிவரக்கூடும் ஆனால்."

"ஆமாம்! ராணி. அதிலும் நாமாகப் போட்டுக்கொண்ட விலங்காயிருந்தால் நாமாகத் தேடிச் சென்ற சிறையாயிருந்தால் விடுதலை கஷ்டமானதுதான். சீதை, கண்ணகி, நளாயினி, சாவித்திரி வழியில் வந்தவர்கள் விடுதலை தேடவும் மாட்டார்கள். அதோ, அங்கே என்ன அவ்வளவு கூச்சல்?" என்றாள் குந்தவைப் பிராட்டி.

உண்மையாகவே, கோட்டை வாசலுக்குச் சற்றுத்தூரத்தில் திரளாக நின்று கொண்டிருந்த பெண்களின் நடுவிலிருந்து அந்தப் பெருங் கூச்சல் எழுந்து கொண்டிருந்தது. குந்தவையும் நந்தினியும் அவ்விடத்தை நெருங்கிப் போனார்கள். பெண்கள் பலர் ஏக காலத்தில் கூச்சலிட்டபடியால் முதலில் இன்னதென்று புரியவில்லை. பிறகு கொஞ்சம் விளங்கியது. இளைய பிராட்டியை அடிக்கடி அரண்மனைக்கு வந்து பார்க்க அவர்கள் விரும்புவதாகவும் ஆகையால் நவராத்திரி ஒன்பது நாளும் கோட்டைக்குள் பிரவேசிப்பதில் உள்ள கட்டுக் காவல்களை நீக்கிவிட வேண்டும் என்றும் அவர்கள் கோருவதாகத் தெரிந்தது.

"ராணி! தங்கள் கணவரிடமாவது, மைத்துனரிடமாவது சொல்லி, இவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றச் சொல்லுங்கள். கேவலம் இந்த ஸ்திரீகளைக் கண்டு பயப்படுவானேன்? இவர்களால் சோழ சாம்ராஜ்யத்துக்கு என்ன ஆபத்து வந்துவிடும்? பழுவூர் சகோதரர்களின் ஆணை நாலா திசையிலும் கடற்கரை வரையில் நீண்டு பரந்திருக்கிறது அல்லவா?" என்றாள் குந்தவை.

"அது என்ன, கடற்கரையோடு நிறுத்திவிட்டீர்கள்? கடல் கடந்து அப்பாலும் அவர்களுடைய ஆணையும் அதிகாரமும் போகின்றன. இதற்கு அடையாளம் சீக்கிரம் கிடைக்கும்" என்று சொல்லி நந்தினி செய்த புன்னகை குந்தவையின் இருதயத்தைப் பிளந்தது. 'இந்தப் பாதகி வார்த்தையின் உட்கருத்து யாதாயிருக்கலாம்?' என்று சிந்தித்தாள்.

இதற்குள் நந்தினி பெரிய பழுவேட்டரையரைச் சமிக்ஞையால் அருகில் அழைத்து அப்பெண்களின் கோரிக்கையையும் இளையபிராட்டியின் விருப்பத்தையும் தெரிவித்தாள்.

"இளைய பிராட்டியின் வார்த்தைக்கு எதிர் வார்தை ஏது?" என்றார் பழுவேட்டரையர்.

பின்னர், ஜனத்திரளின் கோலாகல ஆரவாரத்தினிடையே அவர்கள் கோட்டைக்குள் பிரவேசித்தார்கள்.

அன்று முதல் சில தினங்கள் தஞ்சை நகரும் சுற்றுப் புறங்களும் அளவில்லாக் குதூகல ஆரவாரத்தில் திளைத்துக் கொண்டிருந்தன. குந்தவை தேவி தஞ்சைக்கு வந்த சமயத்தில் நவராத்திரி உற்சவம் சேர்ந்து கொண்டது. பழுவேட்டரையரும் தம்முடைய வாக்கை நிறைவேற்றினார். தங்கு தடையில்லாமல் அந்தப் பத்து நாட்களிலும் ஜனங்கள் கோட்டைக்குள் புகவும் வெளிவரவும் அனுமதித்தார். கோட்டை வாசற் கதவுகள் சதா காலமும் அகலத் திறந்திருந்தன. கோட்டைக்குள்ளே அரண்மனைகளிலும் வெளியில் ஊர்ப் புறங்களிலும் பல கோலாகல நிகழ்ச்சிகள் நடந்து வந்தன. அவற்றைக் கண்டுகளிக்கப் பெருந்திரளாக மக்கள் குழுமிக் கொண்டிருந்தார்கள். அக்கூட்டங்களின் நடுவே அடிக்கடி இரண்டு பூரணசந்திரர்கள் சேர்ந்தாற்போல் உதயமாகிக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு
## யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

### நமது பூமி

நமது பூமி சூரியக் குடும்பத்தில் ஐந்தாவது பெரிய கிரகம். விண்ணிலிருந்து பார்த்தால் பூமி நீல நிறத்தில் தெரியும். யுரேனஸ் கிரகம் நீலமும் பச்சையும் கலந்த நிறத்தில் காட்சியளிக்கும். பூமி மட்டும்தான் சூரியனிடமிருந்து சரியான அளவு வெளிச்சத்தையும் வெப்பத்தையும் பெறுகிறது.

இந்தக் கிரகத்தில் மட்டும்தான் ஆக்ஸிஜன் உயிர்வாழ தேவை. நைட்ரஜன் செல்கள் வளர்ச்சியடைய தேவைப்படுகிறது. அண்ட வெளியில் சூரியக் குடும்பம் மிகச்சிறிய பகுதிதான். இவைகளை விட பெரிய கிரகங்கள் எல்லாம் உள்ளன.

அண்டம் ஏறக்குறைய இரண்டாயிரம் கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவாகியிருக்க வேண்டும் என்றும் பூமி 460 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவாகியிருக்க வேண்டும் என்றும் விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். நிலநடுக்கம், பஞ்சம், இயற்கைச் சீற்றங்கள் போன்றவற்றால் உலகம் அழிந்து விடுவதில்லை.

உ.மதுஷினி.

### கல்வி

கல்வி கற்றவரை எளிதில் நல்வழியில் திருப்பலாம். ஆனால் ஏமாற்ற முடியாது. எளிதில் ஆளலாம்? ஆனால் அடிமைப்படுத்த முடியாது.

-புரேகா பெருமகனார்.

கல்வியின் தலையான நோக்கம் மக்களைச் சிந்திக்கத் தூண்டுவதேயாகும்.

-கிரேன்மர் பெருமகனார்.

ஒருவன் கல்வியறிவின் மிகப் பெரும் பகுதி அவன் தன் முயர்சியால் தானே கற்றுக் கொள்வதாகும்.

-ஸர்வாட்டர்காட்

பல்கலைக்கழத்திலிருந்து (ஆக்ஸ்போர்டிலிருந்து) ஒருவன் பெறுவது வெறும் பட்டம் மட்டுமன்று. (பட்டத்தகுதியே)

-ஆர்தர்வாக்

ஒரு கல்வித்துறையின் பொதுமுடிவுகளை நீ வீட்டிலிருந்தே ஏடுகள் மூலம் அறியலாம். ஆனால் அதன் நுட்பநுணுக்கங்கள், விளக்கங்கள், நயங்கள் அவற்றுக்கு உயிர் ஊட்டும் உயிர்ப்பண்புகள் ஆகியவற்றை அவற்றை உரியக்கமாக உடையவர் (பள்ளி ஆசிரியர்)களிடமிருந்தே பெறக்கூடும்:

-கார்டினர் நீயூமன்

இ.நளாயினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிகளை மீறிய சதிகளாலும் மதிகெட்ட மாந்தர்களின் இழிவான செயல்களாலும் நீதி என்பது நெடுந்தொலைவிலேயே நிற்கின்றது. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிறையில் அடைக்க வேண்டியவருக்கு மற்றொரு அமைச்சுப் பதவி

அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவை சுகாதார அமைச்சுப் பதவியில் இருந்து அதிரடியாக நீக்கியமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த துணிச்சலான நடவடிக்கை எனலாம்.

சுகாதார அமைச்சராக ஹெகலிய ரம்புக்வெல பதவியேற்றதன் பின்னர் இலங்கையின் மருத்துவத்துறை என்பது மிக மோசமான நிலைமைக்குத் தள்ளப்பட்டது.

அதிலும் குறிப்பாக மருந்துகளின் கொள்வனவில் அமைச்சர் கெஹலிய மிக மோசமாக நடந்து கொண்டார்.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்து மனித உயிர்களோடு அவர் விளையாடிய கொடூரம் சொல்லுந்தரமன்று.

ஆம், தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்து அவற்றை நோயாளர்களுக்கு வழங்கியதால் பல்வேறு பாதிப்புகளை நோயாளர்கள் எதிர்கொண்டனர்.

தவிர, நோய்த் தடுப்பு மருந்துகளின் தரமின்மை காரணமாக ஏற்பட்ட ஒவ்வாமை சிலரின் உயிர்களைக் காவு கொண்டது.

இவ்வாறு தரமற்ற அல்லது பாவனைக்குதவாத நோய்த்தடுப்பு மருந்துகளை இறக்குமதி செய்து அவற்றை பொதுமக்களுக்கு ஏற்றியதால் ஒவ்வாமை காரணமாக சிலர் இறந்து போன சம்பவங்கள் வெளிநாடுகளில் நடந்திருக்குமாயின், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் சுகாதார அமைச்சர் தனது சொந்தப் பணத்தில் நட்டஈடு செலுத்தியிருப்பதோடு சிறைக்கும் செல்ல வேண்டியிருந்திருக்கும்.

ஆனால் என்ன செய்வது நம் நாட்டில் என்ன அநியாயம் நடந்தாலும் அதனைப் பொதுமக்கள் தாங்கிக் கொள்வது எழுதப்படாத விதியாயிற்று.

இலங்கையின் சுகாதார அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெல தரமற்ற மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்து பொதுமக்களின் சுகநலத்துக்குக் தீங்கிழைத்தமைக்காக தண்டிக்கப்பட வேண்டியவர்.

ஆனால் அவரிடம் இருந்த சுகாதார அமைச்சுப் பதவியை எடுத்துவிட்டு அவருக்கு சுற்றாடல் அமைச்சுப் பதவி வழங்குகின்ற அளவிலேயே நம் நாட்டு நிலைமை உள்ளது.

இங்குதான் ஓர் விடயத்தை நாம் கூறியாக வேண்டும்.

அதாவது அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மகிந்த தரப்பின் மிக நெருக்கமான செல்லப்பிள்ளை.

அதன் காரணமாகவே அவருக்கு சுகாதார அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது.

இருந்தும் சுகாதார அமைச்சுப் பதவியில் இருந்து கெஹலிய ரம்புக்வெலவை நீக்க வேண்டுமென்ற எதிர்க்கட்சிகளின் கோசம் உச்சமடைய, எதுவும் செய்ய முடியாத நிலையில், அவரிடமிருந்து சுகாதார அமைச்சுப் பதவியை ஜனாதிபதி ரணில் பறித்துள்ளார்.

ஜனாதிபதி ரணிலின் இச்செயற்பாடு தவிர்க்க முடியாதது என்பதனால், மகிந்த தரப்பும் மௌனம் காக்கிறது.

ஆக, நம் நாட்டின் அமைச்சர்கள் எத்தன்மையர் என்பதை இதிலிருந்து மக்கள் புரிந்து கொள்ள முடியும். அவ்வளவுதான்.

# போதைப்பொருளை தடுக்க புதிய நிறுவனம் ஸ்தாபிக்கப்படும்

## ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து போதைப்பொருள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுவதை தடுப்பதற்கான போதைப்பொருள் தடுப்பு கட்டளை நிறுவனமொன்று (Anti-Narcotic Command) ஸ்தாபிக்கப்படுமென தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அதனூடாக முப்படையினர் மற்றும் அரச புலனாய்வு பிரிவினை இணைத்து சுற்றிவளைப் புகளுக்கு அவசியமான திட்டங்களை வகுப்பதற்கான இயலுமை கிட்டும் என்றும் தெரிவித்தார்.

அண்மையில் மீட்கப்பட்ட 4 பில்லியன் ரூபாய் பெறுமதியான 200 கிலோ ஹெரோயின் போதைப் பொருளை கொழும்பு துறைமுகத்தில் நேற்று மேற்பார்வை செய்ததன் பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை கடற்படையினர் மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் இணைந்து மேற்கொண்ட முன்னெடுப்பின் ஊடாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இலங்கையின் கடற்கரை பாதுகாப்பு கப்பல்களை பயன்படுத்தி காலியின் மேற்குப் பகுதியில் 91 கடல் மைல் (168 கி.மீ) தொலைவில் ஆழ் கடல் பரப்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் கட்டளை நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கான சட்ட மூலம் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் எதிர்வரும் நாட்களில் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நாட்டிற்குள் கொண்டுவரப்படும் போதைப் பொருட்களில் 65% இனை மட்டுமே தடுக்க முடிவதாகவும் ஏனைய 35% போதைப்பொருட்கள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுவதாகவும் சுட்டிக் காட்டிய சாகல ரத்நாயக்க, போதைப்பொருள் கொண்டுவரப்படுவதை முற்றாக தடுப்பதற்கான கடல்சார் வேலைத்திட்டம் ஒன்றின் அவசியத்தையும் வலியுறுத்தினார். (ம-7)

# சரக்கு ஏற்றுமதியில் பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கை சுங்கத்தால் வெளியிடப்பட்ட தற்காலிக தரவு அறிக்கையின் படி இலங்கையின் சரக்கு ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 செப்டம்பரில் இலங்கையின் சரக்கு ஏற்றுமதி 11.88 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 951.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல், கடந்த ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் 14.94 சதவீதத்தால் சரக்கு ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

குறிப்பாக ஆடைகள் மற்றும் ஜவுளி, இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகள், தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த உற்பத்திகளுக்கான கேள்வி குறைவதால், சரக்கு ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

2023 ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான காலப்பகுதியில் சேவைகள் ஏற்றுமதிகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதி 2,304.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. இது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 55.67% வளர்ச்சியாகும்.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் மதிப்பிடப்பட்ட ஏற்றுமதி சேவைகள் தகவல் தொழில்நுட்பம்ஃ வர்த்தக செயல்முறை முகாமைத்துவம் (ICT/BPM), கட்டுமானம், நிதிச் சேவைகள், போக்குவரத்து மற்றும் வணிகச் சேவைகளை உள்ளடக்கியதாகும்.(ம-7)

## 3 புதிய தூதுவர்கள்

# நற்சான்றிதழ் பத்திரங்களை ஜனாதிபதியிடம் கையளித்தனர்

(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான மூன்று தூதுவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது நற்சான்றிதழ் பத்திரங்களை கையளித்தனர்.

சுவிற்சர்லாந்து, ஐரோப்பிய யூனியன் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இவ்வாறு புதிய தூதுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நற்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்ட தூதுவர்களின் பெயர்கள் பின்வருமாறு :

இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் கலாநிதி சிரி வோல்ப் ( H.E Dr (Ms) Siri Walf - Ambassador of Switzerland in Colombo)

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் கலாநிதி அலிரேசா டெல்கொஷ் கார்மென் மோரேனோ (H.E.Ms. Carmen Moreno-Ambassador of the European Union in Colombo)

இலங்கைக்கான ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதுவர் கலாநிதி அலிரெசா டெல்கொஷ் (H.E Dr. Alireza Delkosh - Ambassador of the Islamic Republic of Iran ) (ம-7)

## இலங்கை தம்பதிகள்

# மலேசியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் பலி

(கோலாலம்பூர்)

மலேசியாவின் கோலாலம்பூரில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கை தம்பதியினர் உயிரிழந்துள்ளனர்.

மலேசியாவில் மென்பொருள் பொறியியலாளராக பணியாற்றிய தம்பதியினரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மலேசியாவின் கோலாலம்பூரில் உள்ள இவர்களது வீட்டிற்கு அருகில், அவர்கள் ஓட்டிச் சென்ற கார் மற்றுமொரு காருடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தின் போது அவர்களின் மகளும் காரில் இருந்த நிலையில், மகளுக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த பெண்ணுக்கு 33 வயது எனவும் அவரது கணவருக்கு 35 வயது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

# தொலைபேசியில் உரையாடியபடி மயங்கி விழுந்தவர் மரணம்

## பொலிகண்டியில் சம்பவம்

தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த நிலையில் மயங்கி சரிந்த வயோதிபமாது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சல்லியாவத்தை பொலிகண்டி தெற்கைச்சேர்ந்த ஜெயேந்திரன் சோதிமலர் (வயது- 67) என்பவராவார்.

நேற்று திங்கட்கிழமை இரவு தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்த போது மயங்கி விழுந்த நிலையில் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். உடற்கூற்றுப் பரிசோதனையில் மாரடைப்பு காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7.60)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தின்** சீனோர் படகு துறை காரைநகர் கடற்படை தளம் - காரைநகர், காரைநகர் கடற்படை முகாம், இ.போ.ச டிப்போ காரைநகர் களபூமி, பாலக்காடு அம்மன் கோவிலடி காரைநகர், தோப்புக்காடு காரைநகர், ஊரி - காரைநகர் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கிராஞ்சி சிவபுரம், கிராஞ்சி நீர் வழங்கல் சபை, பாலாவி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேரவில் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

19

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### குணவீரசிங்கையாரியன் (1417-1440)

குணவீரசிங்கையாரியன் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகளுள் ஒருவன். இவன் தந்தையான செய வீரசிங்கையாரியனைத் தொடர்ந்து குணவீரன் பட்டத்துக்கு வந்தான். இவன் பட்டத்துக்கு வந்த ஆண்டு 1414 அல்லது 1417 ஆகும். குணவீரனது மகனே கனக சூரிய சிங்கையாரியன் ஆவான்.

### கனகசூரியசிங்கையாரியன் (1440-1450), (2 ஆம் தடவை 1467-1478)

கனகசூரியசிங்கையாரியன் 15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசர்களுள் ஒருவன். இவனது தந்தையாகிய குணவீரசிங்கையாரியனின் குறுகியகால ஆட்சிக்குப் பின் 1440 ஆம் ஆண்டு இவன் பதவிக்கு வந்ததான். 10 ஆண்டுகளுக்குப் பின் இலங்கையின் தென்பகுதியில் அப்போது பலமாக இருந்த கோட்டே இராசதானியின் பிரதிநிதியாகப் படையெடுத்து வந்த சணபகப் பெருமாள் என்றழைக்கப்படும் சப்புமால் குமாரயா என்பவன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றவே கனகசூரியன் தனது மூன்று புதல்வர்களோடும் குடும்பத்தோடும் இந்தியாவுக்குத் தப்பி ஓடினான்.

சப்புமால் குமாரயாவின் ஆட்சி யாழ்ப்பாணத்தில் 17 வருடங்கள் நீடித்தது. 1467 இல் கோட்டே அரசன் இறக்கவே, அந்நாட்டு அரச பதவியில் கண் வைத்திருந்த சப்புமால் குமார யாழ்ப்பாணத்திலிருந்து கோட்டே சென்றான். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய கனகசூரியன் படைகளுடன் யாழ்ப்பாணம் வந்து மீண்டும் அதனைத் தன்வசப்படுத்திக் கொண்டு 1478 வரை 11 ஆண்டுகள் ஆட்சி நடத்தினான்.

### கோட்டே இராசதானியின் யாழ்ப்பாணப் படையெடுப்பு

கோட்டே இராசதானியின் யாழ்ப்பாணப் படையெடுப்பு என்பது, 1450 ஆம் ஆண்டில் கோட்டே இராச்சியத்தின் சார்பாகச் செண்பகப் பெருமாள் யாழ்ப்பாண அரசின் மீது நடத்திய படையெடுப்பைக் குறிக்கும். தொடர்ந்து இடம்பெற்ற போரில் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தை ஆண்ட கனகசூரிய சிங்கையாரியன் போரில் தோல்வியுற, யாழ்ப்பாணம் கோட்டே அரசின் ஆட்சியின் கீழ் வந்தது. கோட்டே அரசன் ஆறாம் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனான செண்பகப் பெருமாளே கோட்டே அரசின் பிரதிநிதியாக யாழ்ப்பாணத்தை நிர்வாகம் செய்தான்.

### படையெடுப்பின் பின்னணி

15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண அரசு வலிமை பெற்று விளங்கியது. பாக்குநீரிணைப் பகுதியில் கடல் ஆதிக்கமும் மன்னார்ப் பகுதியில் முத்துக்குளிப்பு உரிமையும் பெற்றிருந்த யாழ்ப்பாண அரசுக்குக் குறிப்பிடத்தக்க வருவாய் கிடைத்தது. தெற்கே புத்தளம் வரை யாழ்ப்பாண அரசின் ஆதிக்கம் இருந்தது. இக்காலத்தில் யாழ்ப்பாண அரசு தென்னிலங்கை அரசுகளின் மீது செல்வாக்குச் செலுத்தக் கூடிய நிலையிலும் இருந்தது. தென்னிந்தியாவில் விசயநகர ஆதிக்கம் ஏற்பட்ட போது, பாக்குநீரிணையில் அவர்களின் ஆதிக்கம் ஏற்பட்டது. இதனால் யாழ்ப்பாண அரசின் வருமானம் வீழ்ச்சியுற்றதுடன் விசயநகரப் பேரரசுக்குத் திறை செலுத்த வேண்டிய நிலைமையும் உருவானது. இந்தப் பொருளாதார வீழ்ச்சி யாழ்ப்பாண அரசின் வலிமையைப் பெருமளவுக்குக் குறைத்து விட்டது. இதே காலப்பகுதியில் வலிமை குன்றியிருந்த தென்னிலங்கை அரசு, ஆறாம் பராக்கிரபாகுவின் ஆட்சியின் கீழ் வலிமை பெறலாயிற்று.

ஆறாம் பராக்கிரமபாகுவுக்கு ஆண்வாரிசு இல்லை. இதனால், மலையாள நாட்டிலிருந்து வந்து கோட்டை இராச்சியத்தில் பணிபுரிந்து வந்தவனும் போர்க்கலைகளில் வல்லவனுமான பணிக்கன் ஒருவனுக்கும் சிங்கள அரச குலத்துப் பெண்ணொருத்திக்கும் பிறந்த இரண்டு ஆண் பிள்ளைகளைப் பராக்கிரமபாகு வளர்ப்புப் பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. திறமை கொண்ட வீரர்களாக வளர்ந்த இவர்களில் மூத்தவனே சிங்களத்தில் சப்புமால் குமாரயா என அழைக்கப்படும் செண்பகப் பெருமாள். ஆறாம் பரக்கிரமபாகு, தனது மகள் வழிப் பிறந்தவனான செயவீரன் என்பவனை தனக்குப் பின் அரசனாக்க எண்ணினான். இதற்கு செண்பகப் பெருமாள் தடையாக இருக்கக்கூடும் என்பதை உணர்ந்த அரசன், அமைச்சர்களின் ஆலோசனைப்படி, செண்பகப் பெருமாளைக் கோட்டை இராச்சியத்துக்கு வெளியே அனுப்ப முடிவு செய்தான். இதற்கு இணங்க யாழ்ப்பாண அரசின் மீது படையெடுத்துச் செல்லுமாறு செண்பகப் பெருமாளுக்குப் பணித்தான்.

### படையெடுப்பு

செண்பகப் பெருமாளின் யாழ்ப்பாணப் படையெடுப்பு இரண்டு கட்டங்களாக இடம்பெற்றது. முதலில் யாழ்ப்பாண அரசின் கீழ் இருந்த அதன் தென்பகுதிப் பெருநிலப் பரப்பில் அமைந்திருந்த வன்னிச் சிற்றரசுகளைத் தாக்கி விட்டுக் கோட்டை இராச்சியத்துக்கு மீண்டான். மீண்டும் இரண்டாவது தடவையாக வடபகுதி நோக்கிப்படையெடுத்துச் சென்ற அவன், கடுமையான போருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இப்போரில் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தை ஆண்ட கனக சூரியசிங்கையாரியனுக்கு என்ன நடந்தது என்பதை, இப்போர் பற்றிக் கூறும் சிங்கள நூல்கள் குறிப்பிடவில்லை. அவன் இறந்திருக்கலாம் என்றும் சில அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆனால், அவன் தனது மனைவி, மக்களுடன் திருக் கோவிலூருக்குத் தப்பிச் சென்றதாக வைபவமாலை கூறுகிறது.

### போரின் தாக்கங்கள்

யாழ்ப்பாணத்தை வென்ற செண்பகப் பெருமாள் கோட்டை இராச்சியத்துக்கு மீண்டான். ஆறாம் பராக்கிரமபாகு, கோட்டை இராச்சியத்தின் சார்பாளனாக யாழ்ப்பாணத்தை ஆளும்படி பணித்து செண்பகப் பெருமாளை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கே அனுப்பினான்.

இந்த நிகழ்வு, யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது ஏற்பட்ட தாக்கங்கள் குறித்துப் பல்வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. குறிப்பாக, இப்போருக்குப் பின்னரே யாழ்ப்பாண அரசின் தலைநகரம், சிங்கை நகரில் இருந்து நல்லூருக்கு மாற்றப்பட்டதாகச் சில வரலாற்றாளர்கள் கருதுகின்றனர். வைபவமாலையில் உள்ள தனிப்பாடல் ஒன்று, புவனேகவாகுவே நல்லூர் நகரையும் நல்லூர்க் கந்தசாமி கோயிலையும் கட்டுவித்ததாகக் கூறுகிறது. நல்லூர்க் கோயில் கட்டியமும் நல்லூரைக் கட்டியவனாக சிறீசங்கபோதி புவனேகவாகு என்பவனையே குறிப்பிடுகிறது. செண்பகப் பெருமாள் பிற்காலத்தில் கோட்டை இராச்சியத்தின் மன்னனாக முடிசூட்டிக் கொண்ட பின்னர் அவன் சிறீசங்கபோதி புவனேகவாகு என அழைக்கப்பட்டான் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு மாறாக நல்லூர் யாழ்ப்பாண அரசின் தொடக்ககாலத்தில் இருந்தே தலைநகராக இருப்பதாகவும் நல்லூரும் சிங்கை நகரும் ஒன்றே என்ற கருத்தும் பல ஆய்வாளரிடையே நிலவுகிறது.

இதைவிட, இப்போருடன் ஆரியச் சக்கரவர்த்தி வம்ச அரசாட்சி முடிவுக்கு வந்து விட்டதாகவும் பின்னர் வந்த அரசர்கள் எவரும் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பட்டப் பெயரைக் கொண்டிருக்கவில்லை என்று சிலர் வாதிடுகின்றனர்.

### செண்பகப் பெருமாள் (1450-1467)

ஆறாம் பராக்கிரமபாகு இலங்கையின் கோட்டை இராச்சியத்தை ஆண்ட காலத்தில் உடல் வலிவும் போர்த்திறனும் கொண்ட வீரன், குருகுல மாணிக்கத் தலைவன் என்பவன் பராக்கிரமபாகுவின் தளபதியாக இருந்தான். ஆறாம் பராக்கிரமபாகு இவன் மீது கொண்ட நன்மதிப்பு காரணமாக அரச குலப் பெண் ஒருத்தியை அவனுக்குத் திருமணம் செய்துவைத்தான். இவனுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் பிறந்தனர். அவர்களில் மூத்தவனே சப்புமால் குமாரயா என்ற சிங்களப் பெயரால் வழங்கப்பட்ட செண்பகப் பெருமாள் ஆவான். ஒரு போரில் குருகுல மாணிக்கத் தலைவன் இறந்து விட்டார். இதன்காரணமாக ஆறாவது பராக்கிரமபாகு, குருகுல மாணிக்கத் தலைவனின் மகன், செண்பகப் பெருமாளைத் தத்தெடுத்தார். இவனே பிற்காலத்தில் சிறிசங்க போதி புவனேகபாகு என்ற பெயரில் கோட்டே அரசனாக முடிசூட்டிக் கொண்டான்.

1450 ஆம் ஆண்டில் செண்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்தை ஆளத் தொடங்கினான். சைவ சமயத்தைச் சேர்ந்தவனான இவனே, நல்லூர்க் கந்தன் ஆலயத்தை அமைத்தவன் என்றும் கருதப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் இவனது ஆட்சி 17 ஆண்டு காலம் நீடித்தது.

1467 இல், தனது பேரனான ஜெயவீரன் என்பவனுக்குக் கோட்டை அரசைக் கொடுத்து விட்டு ஆறாம் பராக்கிரமபாகு காலமானான். இதனையறிந்த செண்பகப் பெருமாள் கோட்டைக்குச் சென்று ஜெயவீரனைத் தோற்கடித்து சிறிசங்கபோதி புவனேகபாகு என்னும் அரியணைப் பெயருடன் கோட்டை அரசனானான்.

### கனக சூரிய சிங்கையாரியனின் யாழ்ப்பாண மீட்புப்போர்

கனகசூரிய சிங்கையாரியனின் யாழ்ப்பாண மீட்புப் போர் என்பது 1450இல் கோட்டை இராச்சியத்தின் படைகளிடம் தோல்வியுற்றுத் தப்பிச் சென்ற யாழ்ப்பாண அரசன் கனகசூரியசிங்கையாரியன், 17 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக நடத்திய போரைக் குறிக்கும். இப்போர் 1467இல் இடம்பெற்றது.

### போரின் பின்னணி

தோல்வியுற்ற கனகசூரிய சிங்கையாரியன் அரசன், மனைவி, பிள்ளைகளுடன் தமிழ்நாட்டில் உள்ள திருக்கோவிலூருக்குத் தப்பிச் சென்றதாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத...

டுள்ளது.

திங்கட்கிழமை முதல் இந்த தடை நீக்கம் அமுலுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'ரமேஷ்' என்றழைக்கப்படும் நிக்கிலப்பிள்ளை அன்டனி எமில் லக்ஷ்மிகாந்தன் மற்றும் முருகேசு ஸ்ரீ சண்முகராஜா ஆகியோரின் பெயர்களே கறுப்பு பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன.

இதேவேளை, 'ரமேஷ்' மீது இன்டர்போலும் சிவப்பு அறிவிப்பை வெளியிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பயங்கரவாத நடவடிக்கைகளை ஆதரித்ததற்காக இருவரும் 2014 முதல் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அரச ஊழியர்...

விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தற்பொழுது நாட்டில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. மாதம் ஒன்றுக்கான கட்டணம் 30 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் பிழையான ஒரு தகவல் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மின்சாரக் கட்டணம் ஒருபோதும் அதிகரிக்கப்படவில்லை.

30 ரூபாயால் அதிகரிக்கப்பட்ட கட்டணம் ஒருபோதும் சாதாரண மக்களை பாதிக்காது.

நூற்றுக்கு 17 ரூபாய் 18 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பது பொய்யான தகவல்.

அரசாங்கம் என்ற ரீதியில், மின்சார சபை நட்டத்தில் இயங்குகிறது.

ஆனால் அதனை பராமரிக்க அரசாங்கத்திற்கு முடியாது.

மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு பாரிய முதல் ஒன்று செலவாகும் பட்சத்தில் அதற்கான செலவினை மின்சார கட்டணத்தில்தான் அறவிட முடியும்.

சாதாரண மக்களுக்கு இந்த 30 ரூபாய்கட்டணம் பெரிய பாதிப்பினை ஏற்படுத்தாது என குறிப்பிட்டுள்ளார்.(ம-7)

## அடுத்த வருடம்...

களுக்கு அவர் தெரிவித்தார்.

ஜனவரி மாதத்திற்குள், இந்நாட்டு நுகர்வுக்குத் தேவையான முட்டைகளை நாட்டிலேயே உற்பத்தி செய்ய முடியும் என்றார். (ம-7)

## முல்லையில்...

பில் மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு நீராவிபிட்டி கிழக்கு பகுதியில் அண்மைய சில நாட்களாக வாடகைக்கு வீடு ஒன்றை பெற்று தங்கி வந்த இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டு வீட்டின் பின்பாகவுள்ள மலசலகூடத்திற்கு அருகே குழி தோண்டி புதைக்கப்பட்ட நிலையில் சடலமாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தினைச் சேர்ந்த பெண்ணும் த.கீதா (வயது-23), முள்ளியவளை குமாரபுரத்தை சேர்ந்த ஆணும் (வயது-23) திருமணம் முடித்து நீராவிபிட்டி கிழக்கு பகுதியிலுள்ள வாடகை வீடொன்றில் கடந்த மூன்று வாரமாக வசித்து வந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம்மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சங்கீத் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் சட்டவைத்திய அதிகாரி வாசுதேவ, தடயவியல் பொலிஸார் விசேட அதிரடி படையினர், பொலிஸார் ஆகியோர் புதைக்கப்பட்ட சடலத்தை மீட்டனர்.

குறித்த இளம் குடும்பப் பெண் தொலைபேசியில் தனது தாயாரிடம் நாளாந்தம் உரையாடுவதாகவும் கடந்த 21.10.2023 திகதிக்கு பின்னர் மகளின் தொலைபேசி துண்டிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் 23.10.2023 மகளும் மருமகனும் வசிக்கும் வீட்டிற்கு சென்று பார்த்தபோது வீட்டில் யாரும் இல்லாத நிலையில் அவர்கள் தங்கியிருந்த வீட்டின் பின்புறம் புதிதாக மண்ணால் நிரப்பப்பட்ட குழி ஒன்று காணப்பட்டதாகவும் இதனால் சந்தேகம் அடைந்த குறித்த இளம்குடும்ப பெண்ணின் தாயாரால் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் குறித்த பெண்ணின் சடலம் அகழ்ந்து எடுக்கப்பட்டது. (ம-7,299)

## நீர்வேலியில்...

பெண் உயிரிழந்துள்ளார்.

நீர்வேலி இராசவீதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் நீர்வேலி மேற்கைச் சேர்ந்த தன பாலசிங்கம் மகேஸ்வரி (வயது - 72) என்ற ஐந்து பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

நேற்று நீர்வேலி இராசவீதி பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் பொங்கல் நிகழ்வில் குறித்த பெண் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் எதிரே நிறுத்தி வைக்கப்பட்ட வாகனத்தின் மீது டிப்பர் வாகனம் மோதியதில் அவ்வாகனம் மோதித் தள்ளியதில் அவர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,104)

## முறிகண்டி...

கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது இந்த ஆலயம் இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றது.

கோவில் வருமானத்தில் ஒரு பகுதி வன்னிப் பிராந்தியத்தில் இந்து சமய வளர்ச்சிக்காக இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மூலம் செலவிடப்படுகிறது.

திருமுறிகண்டிப் பிள்ளையார் கோவிலின் பரம்பரை அறங்காவலர் என்று கூறிக் கொள்ளும் ஒருவரால், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிர்வகித்து வரும் இவ் ஆலயத்தினை தன்னிடம் மீள ஒப்படைக்குமாறு உத்தரவிடக் கோரி 2011ஆம் ஆண்டு அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்தார்.

நீண்ட காலமாக இடம்பெற்ற இவ்வழக்கு நேற்றைய தினம் மூவர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகளால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. குறித்த ஆலயம் அமைந்துள்ள ஆலய காணி அரசகாணி என்பதால் தனிநபர் ஒருவர் ஆலயத்திற்கு உரிமை கொண்டாட முடியாது.

நீண்ட காலமாக இவ் வழக்கு இடம்பெற்று வந்ததால் குறித்த பிரதேசத்தில் அடிப்படை சுகாதார வசதிகள், உட்கட்டுமானப் பணிகள் மற்றும் பிரதேசத்தை அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்வதற்கு தடை ஏற்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் உமாமகேஸ்வரன், ஆலய உரிமை தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் இப்பகுதியை துரிதமாக அபிவிருத்தி செய்யும் பல்வேறு திட்டங்களை செயற்படுத்தவுள்ளதாக தெரிவித்தார். (ம-7,104)

## சினோபெக்...

கோல்ட் மவுன்ட் பிரதர்ஸ் பிறைவேட் லிமிட்டெட் என்னும் நிறுவனத்தினை நேற்று செவ்வாய்க்கிழமை மானிப்பாயில் ஆரம்பித்துள்ளது.

இந்நிகழ்வில் பங்குதாரர்களான பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜயசாந்த தொட்டஹேவகே, தேசிய விற்பனை முகாமையாளர் துசித குமார, விற்பனை முகாமையாளர் எம்.குகன் விருந்தினர்களாக கலந்து கொண்டதுடன் சினோபெக் எரிபொருள் விற்பனை முகாமையாளர்கள் வாகன திருத்துநர்கள் வாகன உதிரிப்பாக விற்பனையாளர்கள் பொது மக்கள் கலந்துகொண்டனர். (ம-7,33)





































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

நிலவும் மழையுடனான வானிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

13 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவினை சேர்ந்த பகுதிகள் டெங்கு அதி அபாய வலய மாக காணப்படுவதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் நளின் ஆரியரத்ன குறிப்பிட்டார்.

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 67,051 டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

இதனிடையே, இந்த மாதத்தில் மாத்திரம் 2,568 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-7)


## வேலைவாய்ப்பு

எமது WEC நிறுவன Showroom இற்கு வேலையாட்கள் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பதவி வெற்றிடங்கள்

- Show room Accountant
- Show room Administration
- Cash Collector
- Delivery
- Show room Assistant
- Show room Manager

ஆர்வமுள்ளவர்கள் 12.11.2023 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

40 வயதிற்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்

தொடர்புகளுக்கு :

077 028 7429, 021 722 3317

(17572)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்


## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17571)

076 825 7716 (ஆகாஸ்)


# கண்ணீர் அஞ்சலி



எனது உடன் பிறவா சகோதரன்

## அமரர் சுப்பையா தர்மலிங்கம்

21.10.2023 ஆம் திகதி அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய அறத்தி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

தகவல்

பொ.பரமசாமி குடும்பம்

கனடா

(17564)


## பணிப்பெண் தேவை

மாலுசந்தி பத்தானையில் வசிக்கும் வயோதிப மாதுவை தங்கி இருந்து பராமரிக்க பெண் பணியாளர் தேவை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு

077 062 4860

(17559)

## VILLAGE HOTEL

பஸ் சேவை

JAFFNA EXPRESS

AIRPORT PICK UP DROP SERVICE

வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு

வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு

2800/=

(17484)

T.P:077 544 8503

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

VISA

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension

இலங்கை விசா நீடித்து தரப்படும்.

(C-7488)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

V2 TRAVELS

0777-068-777

## அமெரிக்க அதிஸ்ட விசா

இன்னும் 09 நாட்களில் நிறைவடைகின்றன

இன்னும் 09 நாட்களே உள்ளன.

2024 நீங்களும் அமெரிக்காவில்...

இந்த வருடம் A/L

0768226244

55000 இலவச விசாக்கள்

V2 Travels

(C-7488)

V2 TRAVELS

0768226236



## கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை

மானிப்பாய்

### சத்திர சிகிச்சை மற்றும் ஆலோசனை வழிகாட்டல்

பொதுவான சத்திரசிகிச்சை மற்றும் நீரிழிவிலான நாட்பட்ட புண்கள், நீர்க்கட்டிகள் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு தேடுபவரா நீங்கள்?

இலங்கையின் தலைசிறந்த சத்திரசிகிச்சை நிபுணரின் வழிகாட்டலை பெறுவதற்கான ஓர் அரிய வாய்ப்பு

பொது சத்திரசிகிச்சை நிபுணர்

DR.S.மதிவாணன்

MBBS, MD SURGERY, MRCS (ENG),

FELLOWSHIP IN VASCULAR IN GENERAL SURGERY (UK)

CONSULTANT SURGEON

BOARD CERTIFIED IN GENERAL SURGERY WITH VASCULAR INTEREST

புதன்கிழமைகளில்

4.30 PM

முதல் 10 சத்திரசிகிச்சை ஆலோசனைகளும் (Consultation Channeling) இலவசமாக வழங்கப்படும்




(C-7486)

முன் பதிவுகளுக்கு

0212255157 0770661031


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 04 . 01 . 1936

உதிர்வு 05 . 11 . 2022

## அமரர் துரைச்சாமி வாமதேவன்(JP)

திதி :பூர்வபக்க துவாதசி

ஆண்டு ஒன்று முடிந்ததுவோ உங்கள்
அன்பு முகம் நீங்கிச் சென்று
ஆனாலும் எம் மனமோ இன்னும் ஆறவில்லை
நேற்றுப் போல் இருக்குதப்பா
காலங்கள் பல கடந்தாலும்
நீங்கள் என்றும் எம் மனதில்
காவியமாய் இருப்பீர்கள்

(17570)

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தால் இல.19, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org